# பூஞ்சிட்டுக்கள்



**அமரர் சுப்பிரமணியம் யோசேப் பூராசா அவர்களின்**

**விண்ணக வாழ்வின்**

**மூன்றாம் ஆண்டு நினைவு மலர்**

**31.03.2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வின் மூன்றாம் ஆண்டு நினைவாக

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 20 |  | 31 |
| 6 | | 3 |
| 1938 | | 2008 |

# அமரர் சு.யோ.பூராசா

(ஓய்வு பெற்ற அதிபர், முன்னாள் புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலய செயலாளர், அருள்மிகு அந்தோனியார் ஆயல தெய்வக்குழந்தைகள் இல்ல இயக்குநர்)

**நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன்**
**உங்களிடம் திரும்பி வருவேன்** **[யோவான் 14-18]**

P.559

02ம் வட்டாரம்
புங்குடுதீவு

குடும்பத்தினர்

அருள்மிகு அந்தோனியார்
தெய்வக்குழந்தைகள் இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு :- செல்வி . அன்பரசி பூராசா

இடம் :-புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலய தெய்வக்குழந்தைகள் இல்லம்

காலம்:- 31.3.2011 வியாழக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பூஞ்சிட்டுக்கள்" மலரைப் பற்றி ........................

புங்குடுதீவு தென் கரையில் அமைந்துள்ள அருள்மிகு அந்தோனியார் ஆலயத்தின் மண் உரிமைக்காரனும், தெய்வக்குழந்தைகள் இல்ல ஸ்தாபகருமான, அமரர். திரு. சு.யோ.பூராசா அவர்கள் புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் மூலமாகவும், அருள்மிகு அந்தோனியார் ஆலயத்தின் தெய்வக்குழந்தைகள் இல்லத்தின் மூலமாகவும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், ஊடாகவும் "மாணவர்களுக்கு" செயற்படுத்திய சேவைகளை வெளிக்கொணருமுகமாகவும், முன்பள்ளி தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணருமுகமாகவும், அன்னாரின் மூன்றாம் ஆண்டு நிறைவு நாளில் "பூஞ்சிட்டுக்கள்" என்னும் இந்நூல் வெளிக்கொணரப்படுகின்றது.

இப் பூஞ்சிட்டுக்கள் பின்வரும் பகுதிகளைக் கொண்டது

1) மலரைப் பற்றி
2) வாழ்த்துரைகள்
3) ஆசான்களின் முன்பள்ளி தொடர்பான கட்டுரைகள்
4) முன்பள்ளி ஆசிரியர்களிடையே நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டியில் சிறந்தவை எனக் கருதப்பட்ட கட்டுரைகள்
5) தெய்வக்குழந்தைகள் இல்லத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள்
6) நிஜத்தின் நிழல்கள்
7) வினாக்கொத்து

இப்பூஞ்சிட்டுக்கள் வெளி வர எனக்கு வழிகாட்டி ஒத்தாசை புரிந்து ஆலோசனை வழங்கி ஆக்கங்கள் தந்து உதவிய அன்புள்ளங்களுக்கும், கட்டுரைப் போட்டியில் கலந்து ஒத்துழைத்த முன்பள்ளி ஆசியர்களுக்கும் , இதன் மலர்ச்சிக்கு உதவி புரிந்த அனைவருக்கும், எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விசேடமாக எனக்கு சகல வழிகளிலும் வழிகாட்டியாக இருந்து ஒத்தாசைகள் புரிந்த ஓய்வு பெற்ற முன்பள்ளி ஆசிரிய ஆலோசகர் திருமதி.கலா.பிரகதீஸ்வரன் சர்மா அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவள்
பூ.அன்பரசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குத்தந்தையின் அருளாசிச் செய்தி

**"முன்பள்ளி ஒவ்வொன்றும் புனித இடம்."** மாபெரும் தலைவர்களை உருவாக்கும் நாற்று மேடை. .இம்மாபெரும் பணியில் இணையும் அனைவருமே **"மாமனிதர்கள்"**..ஆசிரியர்கள் என்போர் இவ்வேள்வியில் இணையும் உத்தமர்கள், என்பதோடு எதிர்கால சமூகத்தை உருவாக்கும் சிற்பிகள் . இவ்வாறான சிற்பிகளின் எழுத்துக்களைத் தாங்கி வரும் இப் "பூஞ்சிட்டுக்கள்" மலர்வுக்கும், மணம் வீசலுக்கும் வாழ்த்துக்கள்

அடுத்து **"தெய்வக்குழந்தைகள் இல்லம்"** சிறார்களின் வளர்ச்சியில் தன்னுடைய வளத்துக்கேற்ப பணியாற்றுகின்றது. இதன் நிறுவுனரின் அமரத்துவம் அடைந்த நாளில் இப் **"பூஞ்சிட்டுக்கள்"** வெளியிடப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இம்முயற்சி சிறக்கவும் வளரவும் ஆசிக்கின்றேன். அமரர் சுப்பிரமணியம் யோசேப் பூராசாவின் பன்முகப்பட்ட பணிகளின் விளைவாக பலர் நன்மையடைந்துள்ளனர். இவரது வழிநடத்தலினால் வியாபாரிகள் ஆசிரியர்கள் சமூக நலன் விரும்பிகள் எனப் பலரும் உருவாகி வந்துள்ளனர்.

இவரது பணி ஒரு வெற்றிடமாக இருப்பது உண்மை. இது நிவர்த்தி செய்யப்பட வேண்டும். வீச்சுக்கொள்ள வேண்டும். **"இப்பூஞ்சிட்டுக்களின்"**வருகையை மனதார வாழ்த்தி அவரது மகள் செல்வி..அன்பரசியின் முயற்சிக்கு நன்றிகளும் ஆசிகளும்.

அருட்பணி சி. லீயோ ஆம்ஸ்ரோங்

பங்குத்தந்தை

புனித அந்தோனியார் ஆலயம் புங்குடுதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக் கல்விப் பணிப்பாளின் ஆசிச்செய்தி

குழந்தைகளிடமிருந்து என்ன, ஏன், எதற்காக, என்ற கேள்விகள் எழுந்து கொண்டேயிருக்கும். அசைவதெல்லாம் குழந்தைகளுக்கு ஆச்சரியமாகவே இருக்கும். ஓடுகின்றவை ஆடுகின்றவையெல்லாம் உற்சாகமாகவே இருக்கும். குழந்தைகள் எந்த இடத்திலும் சோர்ந்திருப்பதில்லை. எதையாவது செய்து கொண்டே இருப்பார்கள்

இப்படியான மழலைகளின் உள்ளத்தில் நல்ல சிந்தனைகளை விதைத்தால் தான் நாடு முன்னேற்றம் என்ற விளைச்சலை நிச்சயமாக பெறும் என்றும் நம்புகின்றார்கள்.

ஆகையினால் சிறுவர்களிடம் அன்பு செலுத்தி அவர்களின் கவனத்தை தீய சக்திகள் இழுத்துக்கொள்ளாமல் இருக்க பெற்றோர்களும் மற்றும் ஆசிரியர்களும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இம் முயற்சியில் அர்ப்பணிப்பில் ஈடுபடுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களின் சேவைகள் பாராட்டப்பட வேண்டியதே.

**"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"**என்றும் **இன்றைய சிறுவர்கள் நாளைய சமூகத்தின் சிற்பிகள்** என்றும் நெடுநாளாக தமிழில் வழங்கிவரும் பழமொழிகளை நீங்கள் அறிவீர்கள்.

எனவே வருங்கால தலைவர்களாகிய இன்றைய பிள்ளைகளை நல்லவர்களாக மட்டுமல்ல வல்லவாகளாகவும் ஆக்க வேண்டிய பொறுப்பு எம் எல்லோரையும் சார்ந்தது என்பதை உணர்ந்து செயற்படுவே

**"What matters is not to add years to you life**

**but,to add life to our years"**

**Alexis Carrel**

புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலய தெய்வக்குழந்தைகள் இல்ல முன்னாள் இயக்குணர் அமரர் சு.யோ.பூராசா (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்கள் நினைவாக வெளிவரும் "பூஞ்சிட்டுக்கள்" மலருக்கு எனது நல் ஆசிகள்.

திரு.G.V. இராதாகிருஸ்ணன்,

வலயக் கல்விப் பணிப்பாளர்,

தீவகம் வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

யா/புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிசன் வித்தியாலய முன்னாள் அதிபரும் "புனித அந்தோனியார் ஆலய தெய்வக் குழந்தைகள் இல்ல" ஸ்தாபகரும் சிறந்த சமூக சேவையாளருமாகிய அமரர் சு.யோ.பூராசா அவர்களின் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு முன்பள்ளிக் குழந்தைகளையும், ஆசிரியர்களையும், அவைசாந்த நிறுவன அமைப்பக்களை யும், உள்ளடக்கிய ஆக்கங்களைக் கொண்டு மலர்கின்ற **"பூஞ்சிட்டுக்கள்"** என்னும் மலர் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**"சிட்டக்குருவி போல –நீ**

**திரிந்து பறந்து வா பாப்பா"** என்றார் பாரதியார் பாலப்பருவம் மகிழ்ச்சி நிறைந்த பருவம் பூக்கள் தோறும் தேன் தேடிப் பறந்து பறந்து அந்த அமுதத்தைப் பருகி ஆனந்தமாக வாழும் சிட்டுக்குருவி போல பாலர் வகுப்புக்களில் கற்கும் மாணவர்களுடைய பிஞ்சு நெஞ்சங்களில் முகிழ்க்கும் எண்ணங்கள்.எழுத்துருவில் வருவது மகிழ்ச்சியானதே

**"ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்"** என்ற வரியை பிள்ளைகளின் மனதில் பதிய வைக்கும் ஆசிரியர்களின் எண்ணங்கள், சிந்தனைகள், ஆற்றல்கள், போன்றவற்றை இம் மலரின் ஊடாக வளர்த்தெடுக்க வேண்டியதும் அவசியமாகும்.

கதைகள், கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள். பாடல்கள், மற்றும் சிறுவர் சார்ந்த படைப்புக்கள் போன்றவற்றை வெளியீடு செய்வதோடு மற்றும் சிறுவர்கள் விரும்பத்தக்க விடயங்கள் படங்கள் காட்சிகள் போன்றவற்றை வசீகரமான நிறங்களுடன் அச்சடிக்க வேண்டும்

இந்தியாவிலும் நம்நாட்டிலும் பல குழந்தைக்கவிஞர்கள் குழந்தைப் பத்திரிகை ஆசிரியர்கள் தோன்றி சிறுவர்களுக்கு கலை இன்பம் ஊட்டுகிறார்கள். அப்படிப்பட்ட திறமைசாலிகளை இனம் கண்டு வளர்த்தெடுக்கும் பணியில் **"பூஞ்சிட்டுக்கள்"** சஞ்சிகை முன்நின்று உழைக்கும் என நம்புகின்றேன். உழைப்பதற்கு வேண்டிய திறனையும் பக்க உதவிகளையும் **"குழந்தையேசு"** நல்குவார் என்ற நம்பிக்கையோடு இம்மலர் பூத்துக் குலுங்க மனதார வாழ்த்துகின்றேன்.

இம்மலரை வெளியிட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு அயராது உழைத்து வரும் அமரர் பூராசாவின் புதல்வி செல்வி. அன்பரசி அவர்களை உளமார பாராட்டுகின்றேன். மேலும் இச் சஞ்சிகையின் சிறப்புகள் உயரவும் முயற்சிகள் வெற்றி பெறவும் ஆசி கூறி இம்மலர் ஆண்டு தோறும் மலர வாழ்த்துகின்றேன்.

திரு.க.தர்மகுணசிங்கம் (முன்னாள் அதிபர்)

யா/புங்குடுதீவு மகாவித்தியாலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

பிஞ்சு உள்ளங்களில் புனித நிலையுண்டு. அந்தப் புனித நிலையினைப் பூரணப் படுத்துவதற்கு புத்தகங்கள் ஆசிரியர்கள் உதவி புரிகின்றன. என்பது மறக்கமுடியாத உண்மையாகும். இதையறிந்த தெய்வக்குழந்தைகள் இல்லத்தினர் குழந்தைகளை இந்நாட்டின் எதிர்காலச் செல்வங்களாக தலைவர்களாக தரமுயர்த்த வேண்டும் என்றும் அவர்களை பூரணமானிதனாகவும் அறிவு படைத்தவர்களாகவும் ஆற்றலுள்ளவர் களாகவும் இபண்பில் உயர்ந்தவர்களாகவும் ஆளுமை அன்பு கல்வி கலாச்சாரம் போன்ற திறமைகளைக் கொண்டவர்களாக வழிப்படுத்தவும் நெறிப்படுத்தவும் எண்ணி இவர்களை வழிநடாத்தும் ஆசிரியர்களின் ஆற்றலை வெளிக்கொணரும் முகமாக இப் "பூஞ்சிட்டுக்கள்" என்னும் நூலை வெளியிட்டுள்ளார்கள். அவர்களின் எண்ணமானது காலத்தின் தேவையாகும். **"இப்பூஞ்சிட்டுக்கள்"** நூல் முன்பள்ளிஆசிரியர்களின் உள்ளவெளிப்பாடுகளையும் ஆற்றல்களையும் ஆர்வலர்களின் எண்ணங்களையும் பாட கருத்துக்களையும் வெளிப்படுத்தும் உந்துசக்தியாக அமைந்துள்ளமை மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

இத்தெய்வக்குழந்தைகளின் இல்ல நிர்வாகிகளின் எண்ணம் நிறைவேற சிறந்த முறையில் வடிவமைத்தமைக்காக அவர்களைப் பாராட்டுவதுடன் இந்நூல் அனைத்து உள்ளங்களையும் கவரவும் எல்லோருடைய கரங்களிலும் தவழவும் மனதார வாழ்த்துகின்றேன்.

திருமதி.தபோதரன் சுமித்தராவதி

தபால் அதிபர் புங்குடுதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

உலகிலே சமூக சேவை என்பது ஒரு மகத்தான செயற்பாடாகும். அதிலும் தனிமனிதனது எண்ணங்களால் உந்தப்பட்டு இயல்பாக சேவைசெய்யத் தூண்டுவது ஓர் அரிய தொண்டாடுமாகும். அந்த வகையில் அமரர் சு.யோ.பூராசா அவர்கள் எமது கிராமத்திற்கு ஆற்றிய பணிகளும் சேவைகளும் என்றும் மறக்க முடியாதவை ஆகும்.

ஆவற்றில் பாலர்களின் கல்வி வளர்ச்சியில் தந்தையின் வழியில் நின்று மகள் தந்தைக்காற்றும் பணியாக **"பூஞ்சிட்டுக்கள்"** என்னும் மலரினை பாலர்களுக்காக வெளியிடுவதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். அத்துடன் இக்கன்னி மலரான **"பூஞ்சிட்டுக்கள்"** சிறப்புற்று வெளிவர எல்லாம் வல்ல சிவயோக சுவாமிகளின் பாதம் நினைந்து அருட்தந்தை வேதாத்திரி மகரிசி அவர்களின் பெயரால் வாழ்க வளமுடன் என வாழ்த்தி நிற்கின்றோம்.

வடஇலங்கை சர்வோதயம்
குடும்பத்தினர்
புங்குடுதீவு .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிக் குழந்தைகளிடம் எழுத்துப்பயிற்சியின் மூலம் மொழி விருத்தியை ஏற்படுத்தல்

திரு த.விக்கினேஸ்வரன் உதவிக்கல்விப் பணிப்பாளர் முன்பள்ளி

எழுதுவது என்பது குறியீடாக எண்ணத்தை வெளியிடுவதாகும். வெளியீட்டு ஆற்றலை வெளிப்படுத்துவதை விருத்தி செய்வதற்காக எழுதுவதில் ஆர்வமும், ஊக்கமும் ,பிள்ளைகளிடத்தே ஏற்படுத்தப்பட வேண்டும். இவர்கள் வரைவதற்கும் எழுதுவதற்கும் இடையே வேறுபாடு காணப்படமாட்டார்கள். அவர்கள் உண்மையில் படங்களை வரைவது போல் எழுத்துக்களையும் வரைவர்.

ஆனால் இவர்களை எழுதப்பழக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அவர்களின் கையை ,விரல்களை, அசைக்கவும் இயக்கவும் பழக்குவதே நடைபெற வேண்டும். எழுத்து திசையை ஆசிரியர்கள் முறையாகச் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். முன்பள்ளி கல்வியிலே எழுதுவது பிழையாக அறிமுகப்படுத்தப்படும் ஆயின் பிள்ளைகள் வளர்ந்த பின்னரும் மாற்றுவது கடினமாகும். எனவே முன்பள்ளி ஆசிரியர்கள் தமது பொறுப்பை உணர்ந்து செயற்படல் அவசியமாகும்.

இந்த வகையில் பிள்ளைகளிடம் மொழி வளர்ச்சியை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை ஆசிரியர்கள் திட்டமிட்டு ஒழுங்கமைத்தல் எவ்வாறு எனநோக்குவோம்

**1)சுதந்திரமாக உரையாடல்**

இவ் உரையாடலின் போது ஆசிரியர் பிள்ளைகளிற் கிடையிலான உறவு வலுப்பெறுகிறது. இதனால் பிள்ளைகள் தம் எண்ணங்களை முழுமையாக வெளிப்படுத்துவதன் மூலம் மொழிதிறன் நன்கு வளர்ச்சி யடைகிறது.

**2) இசையும் அசைவும்**

ஆசிரியர்கள் பொருத்தமான பாடலை தெரிவு செய்து சரியாகப்பாடினால் பிள்ளைகளும் நன்கு கவனித்து அதன் மூலமாக புதிய வார்தைகளை கற்பதடன் ஆசிரியர் எவ்வாறு கருத்துக்களையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துகிறார் என்பதையும் அறிந்து கொள்கிறது.

**3) கதை கேட்டலும் கதை சொல்லுதலும்-**

கதைகூறுதலும் கதை கேட்பதும் பொழுது போக்கிற்கும் கற்பித்தலுக்கும் இலக்கிய இரசனையாக வளப்பதற்கும் உதவும் இதனால் ஆசிரியர்கள் கதை கூறும் போது பிள்ளைகளின் அனுபவத்தோடு ஒத்ததாகவும் நல்ல பண்புகளை உடையதாகவும் கூறவேண்டும்.

**4)பாவனை செய்தலும் நடித்தலும்**

எண்ணங்களையும் கருத்துக்களையும் ஒரு பாத்திரத்தின் மூலமாக வெளிப்படுத்தலே பாவனை செய்தலும் நடித்தலும் ஆகும். இதன் மூலம் பிள்ளைகளின் பேச்சுதிறனை வளர்கக முடியும்.

**5)சித்திரம் வரைதலும் வர்ணம் தீட்டுதலும்**

வரைந்து கொண்டிருக்கும் போது ஆசிரியர் ஒவ்வொரு பிள்ளையிடமும் சென்று வரைகின்ற படம் பற்றி உரையாடும் போது பிள்ளைகளின் மொழி வளர்ச்சியடைகிறது. அத்துடன் தன் கருத்துக்களை மகிழ்ச்சியுடன் ஆசிரியரிடம் பரிமாறிக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிக் கல்வியின் செயற்பாடுகள்

**திரு த.தவராசா** (ஓய்வு பெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர்,முன்பள்ளி)

முறையான கல்விக்கு முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இத்துறையில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. மகளிர் விவகார அமைச்சும், கல்வி அமைச்சும், இணைந்து பல திட்டங்களை அமைத்து செயற்படவுள்ளன.

ஆரம்பப் பிள்ளைப்பருவம் மிக முக்கியமானது. இப்பருவம் துரித வளர்ச்சிப் பருவமாகும். உடல் உளச் செயற்பாடுகளும் விருத்தி காண்கின்றன. வீட்டுச் சூழல் கற்றற் செயற்பாடுகளை வாரி வழங்குகின்றது. இதனை கல்வியியலாளர்கள் ஆய்வு மூலம் நிரூபித்துள்ளனர். முறையான கல்வியை பாடசாலைகள் வழங்குகின்றன. நமது நாட்டில் பாடசாலைகளில் அனுமதிப் பெற ஐந்து வயதை பூர்த்தி செய்திருக்க வேண்டும். இந்த ஐந்து வயதுவரை பிள்ளை கற்காமல் இருக்கின்றதா? ஒன்றுமே கற்காது பிள்ளைகள் வெற்றுக் குடங்களாகவா பாடசாலைகளுக்கு வருகின்றனர். இந்தக் கேள்விகள் சிந்தனைக்குரியவை.

இந்த முக்கிய துரித வளர்ச்சிப் பருவத்தைப் பயனுள்ள வழிகாட்டலில் ஈடுபடுத்த வேண்டும் என்பது தான் அறிஞர்களது கருத்தாகும். ஆரம்பப் பிள்ளைப்பருவத்தை இரு பிரிவாக்கி கற்றற் செயற்பாடுகளை வகுத்துள்ளனர்.

1) **0-3 வயதுப்பிரிவினர் -வீட்டினை அடிப்படையாகக் கொண்ட கல்வி**
2) **3-5 வயதுப் பிரிவினர் -முன்பள்ளிக் கல்வி**

**வீட்டினை அடிப்படையாகக் கொண்ட கல்வி**

வீட்டினை அடிப்படையாகக் கொண்ட கல்வியை(Home Based Education) மகளிர் விவகார அமைச்சு சமூக திணைக்களங்கள்ஊடாகவும், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும், யுனிசெவ் உதவியுடன் முன்னெடுத்து முன்னோடித் திட்டங்களை நடத்துகின்றது. அடுத்த ஆண்டு இத்திட்டம் நாடளாவிய அளவில் விரிவாக்கப்பட இருக்கிறது.

பெற்றோருக்குத் தங்கள் குழந்தைச் செல்வங்களின் பெறுமதியை விளக்கி, அவர்களால் விளையும் நன்மைகளையும் கூறி விழிப்புணர்வை ஊட்டுதல் பிள்ளைகளை வளர்க்கும் போது சத்துணவும், நோய்த்தடுப்பும், பாதுகாப்பும், தேவை ஆகியவற்றை உணர்ந்து அன்பும், ஆதரவும் காட்டி, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது பற்றிய அறிவையும் ஊட்டுதல் போன்ற செயற்பாடுகளை கிராம மட்டங்களில் நடைமுறைப்படுத்தல். ஐந்து குழந்தைகளுக்கு ஒரு தொண்டர் என்ற அடிப்படையில் ஒரு கிராமத்தில் 10 தொண்டர்களைக் கொண்ட "பிள்ளை நட்புக் குழுக்கள்" உருவாக்கப்படவுள்ளன. இத் தொண்டர்களுக்கூடாக பெற்றோர்களை பொருத்தமான நிலையங்களில் சந்தித்து விழிப்புணர்வை விரிவாக்கம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பெற்றோருக்கும் அல்லது சமூகத்துக்கும் கிராம பாடசாலைகளுக்குமிடையில் இறுக்கமான பிணைப்பபை ஏற்படுத்தி பாடசாலையின் விளையாட்டுத் திடலைச் செப்பனிட்டு பொருத்தமான சிறுவர் பூங்காவை பெற்றார், சமூக ஒத்துழைப்புடன் அமைத்தல். வீட்டின் சின்னஞ்சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறார்களை இத் தொண்டர்கள் கிழமையில் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு இப் பூங்காவுக்கு அழைத்து வந்து 1 ஆம் 2ஆம் தர மாணவர்களோடு சேர்ந்து விளையாட சந்தர்ப்பத்தை உருவாக்குதல் இச்செயற்பாடுகள் மூலம் சமூகத்தக்கும், பாடசாலைக்கும் கல்வி த் ததிணைக்களஙகளுக்குமிடையே புரிந்துணர்வும், இணக்கப்பாடும் ஏற்படுத்தல் என இச்செயற்பாடுகள் அமையவிருக்கின்றன.

இதற்காக செயற்பாட்டுக் குழுக்கள் கிராம, கோட்ட ,வலய, மாகாண தேசிய மட்டங்களில் அமையவுள்ளன. இவை நடைமுறையில் செயற்படும் போது ஆளுமையுள்ள சமூகம் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வீட்டினை அடிப்படையாகக் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக 8 சிறு நூல்களை மகளிர் விவகார அமைச்சு வெளியிட்டுள்ளது. தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு நிறைய எழுத்து, சொல், வசன பிழைகளோடு வெளிவந்துள்ளன. சரியான விநியோகப் பாதை, நெறிப்டுத்தாமையினால் இவை எங்கோ முடங்கிக் கிடக்கின்றன. இவற்றுக்கு யுனிசெப் நிதியுதவி செய்துள்ளது.

வீடுகளிலே, அன்றாடம் பெற்றோர் ஆற்றும் கடமைகளைப் பிள்ளைகள் பார்வையிடவும், செய்யவும், வசதிகள் செய்து, தலையீடு செய்து நெறிப்படுத்த வேண்டும் என்பதையே இந்நூல்கள் விளக்குகின்றன. வீட்டை அடிப்படையாகக் கொண்ட கல்வியை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. வீட்டுக் கல்வி நல்ல நெறிப்படுத்தல் மூலம் அமைந்தால் முறையான கல்விச் செயற்பாடுகள் நிறைவானவையாக அமையும் என்பதைக் கல்விமான்கள் வலுவாக நம்புகின்றனர் இச்செயற்பாட்டை பல தொண்டர் நிறுவனங்கள் நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளனர்.

## முன்பள்ளிக் கல்வி

முன்பள்ளிக் கல்வி 3-5 வயதுப் பிள்ளைகள் தொடர்கின்றனர். தொண்டர் நிறுவனனங்களும், தனியாரும் ,உள்ளுராட்சித் திணைக்களங்களும் முன்பள்ளிகளை நடாத்துகின்றன .முன்பள்ளிக் கல்வி முதலாம் தரத்திற்கு முறையான கல்வியைப் பெறச் செல்லும் பிள்ளைகளுக்கு அடிப்படை அறிவாற்றலை வழங்குகின்றது. பாடசாலைகளில் முதலாம் தரத்தில் அனுமதிக்கப்படும் பிள்ளைகளில் 75 வீதமான அடிப்படை ஆற்றல் அற்றவர்களாக உள்ளனர் என ஆய்வுகள் கூறுகினறன. இந்த அடிப்படை அறிவின்மை பாடசாலை வாழ்நாள் பூராவும் தொடர்வதாகவும் கூறப்படுகிறது. அதனால் முன்பள்ளிக் கல்வி பற்றிய எண்ணக்கரு வலுப்பெற்றுள்ளது.

அமைச்சில் கல்விக்கென தனிப் பிரிவு ஒன்றைத் தொடங்கி, இக் கடமைகளை நிறைவேற்றி வருகிறது. இப்பிரிவின் ஊடாக முன்பள்ளி செய்தி மடலான "புன்சிரிப்பு 1999 ஜனவரி தொடக்கம் மாதந்தம் வெளியிட்டு வருகிறது. திருகோணமலை மாவட்டத்தில் இச் செயற்பாடுகளை நிறைவேற்ற சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் சகல ஒத்தாசைகளையும் செய்து நிதியுதவி செய்கிறது. முன்பள்ளிக் கல்விப் பிரிவிற்கென கணணி அச்சுப்பொறி, மூலப் பிரதி எடுக்கும்பொறி, ஆகியவற்றைத் தந்துதவியுள்ளது.

1997இல் ஆரம்பிக்கப் பெற்ற முன்பள்ளிக் கல்விப் பிரிவில் சிறுவர் பாதுகாப்பு நிறுவன அலுவலர்களும் கடமையாற்றுகின்றனர். பல நிபுணத்துவ ஆலோசகர்களது அனுசரணையுடன் ஆசிரியர் வளவழிகாட்டிச் செயல் நூல் ஆக்கப்பட்டுள்ளது. தமிழ், சிங்கள மொழிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை அச்சிடும் பணி நடைபெறுகிறது. யுனிசெவ் அச்சிடும் செலவினை பொறுப்பேற்றுள்ளது. பயிற்றுநர்களுக்கான பயிற்சியினை அமைச்சு டிசம்பர் மாதத்ததில் மேற்கொள்ளவுள்ளது.

24கல்வி வலயங்களிலும் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுக்காக உதவிக் கல்விப் பணிப்பாளர்களை நியமனம் செய்துள்ளது இவர்களுக்கான பயிற்சி கடந்த பெப்பரவரி மாதம் அமைச்சில் வழங்கப்பட்டுள்ளது. மேலதிகப் பயிற்சியினை இம்மாதம் 20, 21 ஆம் திகதிகளில் வழங்கத்திட்டமிட்டுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள், முன்பள்ளிக் கல்விக்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டும். முன்பள்ளிக் கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்களை நெறிப்படுத்தி மேற்பார்வை செய்ய வேண்டும். அவர்களது மாதாந்த பணி நிறைவேற்று அறிக்கையினை அனுப்பி வைக்க வேண்டடும்.

முன்பள்ளிக் கல்வி உதவிப் பணிப்பாளர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. முன்பள்ளிகளில் தர மேம்பாட்டை ஏற்படுத்துமுகமாக 28 தரக் குறிகாட்டிகளை ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு உருவாக்கியுள்ளது. அதன் அடிப்படையில் முன்பள்ளிகளில் மேற்பார்வை நடைபெறுகிறது. பல முன்பள்ளிகள் இன்னும் பதியப்படாதுள்ளன. பல முன்பள்ளிகள் வசதிகளற்ற நிலையில் உள்ளன. இவற்றைக் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.

இவ்வமைச்சு முன்கல்வியில் கரிசனை கொண்டுள்ளது. நமது மாகாணத்தில் மட்டும் தான் உத்தியோக பூர்வமான செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இதற்குரிய புள்ளி விபரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. நமது மாகாணத்தில் முன்பள்ளிக் கல்வியில் காலத்தின் தேவைக் கேற்ப முயற்சிகளை மேற்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு மூலம் கல்வி

திருமதி கலா பிரகதீஸ்வரன்
ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் ( முன்பள்ளி)

முன்பள்ளிக்கல்வி என்றால் ஒரு குழந்தையின் வளர்ச்சியில் கல்விக்கான அடித்தளத்தை அமைத்துக்கொடுப்பதாகும். இக்கல்வியானது உயர்கல்விக்கும் உவப்பான வாழ்க்கைக்கும் பிள்ளையயை உயர்த்தும் ஏணி என்றே கூறலாம். இப்பள்ளிப்பருவம் பிள்ளையின் வாழ்க்கையிலே மிக முக்கியமான பங்கைப் பெறுகிறது. இப்பருவம் ஆக்கத்திறன் வளர்ச்சியை விருத்தியடையச்செய்கிறது. இப்பராயத்தில் பெறும் கல்வியானது முற்றிலும் ஒரு புதிய அனுபவமாகும்.

வீட்டில் இருந்து வெளியேறி முதல் முதலாக ஒரு புதிய சூழலைக்காண்கிறான். அவ்வாறு செல்கின்ற பிள்ளை சமூக இசைவாக்கப்படுகின்றான். பிள்ளையின் ஆளுமை விருத்திக்குத் தேவையான தொடர்பாடல்கள் அமைதல் வேண்டும். இப்பள்ளிப்பருவத்தில் புதுமை வேட்கை, பலவிடயங்களைத்தேடும் ஆற்றல், ஆராயும் ஆற்றலைப் பெறுகிறான். இவைகளே கல்வியின் அடித்தளமாகும். எனவே தான் முன்பள்ளிக் கல்வியே வளமான கல்விக்கு உரம் எனலாம்.

இப்பருவத்தில் கவிஞர்கள் பாடியது போல் "ஓடிவிளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்றும் "அம்மா நான் விளயாடப்போறேன் கையில் அன்புடன் பட்சணம் தந்தனுப்பென்னை "என்பதன் நோக்கம் பாப்பா பருவத்தில் நன்றாக விளையாட விட வேண்டும். முன்பள்ளிப்பருவமே விளையாட்டில் கற்கும் காலமாகும் . உண்மையில் குழந்தைகள் குதுாகலமாக உயிரோட்டமான விளையாட்டின் மூலம் தான் உடல் உளவளர்ச்சியைக் காண முடிகிறது. " விளையாட்டின் மூலம் கல்வி'' என்று கூறும் போது உதாரணமாக கணித பாடத்தை, கணித எண்ணக்கருவை, வெளிப்படுத்த, கூடக் குறைய, பெரிய, சிறிய, நீளம், அகலம், உயரம், என்பதை விளையாட்டு மூலம் செயற்படுத்தலாம். .ஒழுங்கற்ற பேச்சு வளத்துடன் வரும் குழந்தை ஏனைய சகபாடிகளுடன் விளையாட்டில் ஈடுபடும் :போது பேச்சு ஆற்றலை விருத்தி பெறக்கூடிய வாய்ப்பை பெறுகிறான். வெற்றி தோல்வியை சிறு பராயத்தில் இருந்தே சமமாக ஏற்கும் பண்புகள் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு வளர இடம் ஏற்படும். கூடி வாழக் கற்றுக்கொள்கிறது. ஏனையவர்களின் அபிப்பிராயங்களை ஏற்கும் பண்பு திட்டமிட்டுச் செயற்படுதல், சகபாடிகளுடன் கூடிப்பழகும் போது தன் சொல்லுக்கு மற்றவர்கள் மதிப்பு கொடுப்பதால் குழந்தை தன்னைத் தானே மதிக்கப்பழகுகிறான் .தலைமைப் பொறுப்பை ஏற்க ஆசைப்படுகிறான். .சகபாடிகளுடன் நண்பனாகிறான். துள்ளித்திரியும் பருவத்திலே அவர்களை நன்கு விளையாட விட்டு அவதானித்தால் முன்னையவர்கள் கூறுவது போல் விளையாட்டிலே அவனது எதிர்காலத்தை அறியலாம் என்றனர். .எனவே பிள்ளையின் சிந்தனை அறிய முன்பள்ளிப் பருவம் மிக முக்கியமானது தசைநார்ப் பயிற்சி, எழுத்து முன்பயிற்சி , இவைகளின் பின்னர் தான் எழுத்தை அறிமுகம் செய்தல் வேண்டும். ஆசிரியரின் பங்களிப்பு, பழக்கவழக்கங்கள், பண்புசாராவிருத்தி, கடவுள் நம்பிக்கை, தன்சுத்தம், வீட்டுச் சுத்தம், சாப்பிடும் விதம், துப்பரவு ,வீட்டு பழக்க வழக்கங்கள் ,தாய் தந்தை பேணுதல் ,பெரியோரை வணங்கல், போன்ற பண்புகளையும் ,தத்தம் கலாச்சார விழுமியங்களுக்கு முக்கியத்துவம் அளியுங்கள். பிள்ளைகளின் தனியாள் வேறுபாடுகள் உண்டு. அதனை அறிந்து அவனது எதிர்கால தேவைகளை அறிந்து அத்திவாரத்தை இட வேண்டும்.

**என்னை எனக்காக சிந்திக்க விடுங்கள் - இல்லையேல்**
**என்னையே நான் இழந்து விடுவேன் (சீனப்பழமொழி)**
அறிஞர்கள் கூறுவது போல்

**"தாய் போல் அரவணைத்து**
**தந்தை போல் கண்காணித்து**
**சகோதார் போல் அரவணைத்து**
**அயலவர்போல் பாதுகாத்து**
**நல் ஆசிரியர் போல் அர்ப்பணித்து "**
குழந்தைச் செல்வங்களின் எதிர்காலத்தை வளம் பெறச் செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி ஒரு பார்வை.........

திரு N.K. விஜயகுமார்
பொறுப்பதிகாரி,
தீவகம் தெற்கு, பிரதேச சபை, புங்குடுதீவு

புங்குடுதீவு பிரதேசத்தில் 14 முன்பள்ளிகள் இயங்குகின்றன. இவற்றில் பெரும்பாலனாவை சனசமூக நிலைய நிர்வாகத்தினராலேயே நிர்வகிக்கப்படுவதுடன், சில முன்பள்ளிகள் உள்ளூரிலுள்ள சமூக அமைப்புக்களினாலும் நிர்வகிக்கப்படுகின்றன. அனேகமான முன்பள்ளிகளில் கடமைபுரிகின்ற ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை. இவ்வாசிரியர்களுக்குரிய பொடுப்பனவுகளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் உள்ளூராட்சி சபையிடம் காணப்படவில்லை. இந்நிலையில் பார்க்கின்ற போது முன்பள்ளிக் கல்வி என்பது ஆரம்ப கற்றல் நிலைகளில் முக்கியமானதொன்றாகும். இந்த முன்பள்ளிகளில் குழந்தைகள் ஆடல், பாடல், கற்றல், கதை கேட்டல், விளையாடல், போன்ற குழுநிலையிலான செயற்பாடுகள் மூலம் அவர்கள் அடுத்த கட்ட கல்வி கற்றல் நிலைக்கு தயார்படுத்தப்படுகின்றார்கள். இந்த வகையில் பார்க்கின்றபோது குடும்ப உறுப்பினர்களுடனும் உறவினர்களுடனும் மாத்திரமே தொடர்பாடலை பேணி வந்த குழந்தைகள் குழுநிலையிலான சேர்ந்து கல்வி, விளையாட்டு, பழக்க வழக்கம், போன்றவற்றைப் பயிலுகின்ற தன்மையை இம்முன்பள்ளிகளே கற்றுத் தருகின்றன. எனவே இந்த முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து இக்கற்பித்தல் செயற்பாடுகளை நல்ல முறையில் செயற்படுத்துவதற்கு இப்பிரதேசத்திலுள்ள சமய நிலையங்கள் செயற்பட முன்வர வேண்டும்.**பல ஆயிரம், பல லட்சங்களையும் செலவழித்து திருவிழாக்கள் செய்கின்ற நாம் இதனையும் ஒரு தரம் சிந்தித்து செயற்படுவோமாக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப பிள்ளைப் பருவ கல்வி

**திருமதி.கலைவாணிஅம்பிகைபாகன்**

**யாழ்ப்பாணம்**

விவசாயத்தில் நல்ல தேர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்ற நல்லதொரு விவசாயி நீண்ட கால வினைத்திறன மிக்க மரங்களை உருவாக்கும் நோக்குடன் நாற்று மேடை ஒன்றை அமைக்கத் திட்டமிடும் போது தனது காணி மண்ணை நன்குசோதனை செய்து சுற்றுச்சூழல் எல்லாம் நுணுக்கமாகப் பார்த்து தக்கதோர் இடத்தைத் தெரிவு செய்வான். மண்ணைக் கொத்தி கிளறி தூய்மையாக்கி செவ்வனே பதப்படுத்துவான். உமியிட்டு எரித்து எருவிட்டு வளப்படுத்துவான். பதமாக காயவைத்து பாதுகாப்பான சூழலில் வைக்கப்பட்ட விதைகளை இரு கைகாளலும் ஏந்தி வந்து விதைப்பான். நீர் விட்டு வைக்கோல் மூடி முளை வரும் வரை அமைதியாகக் காத்திருப்பான். வித்துக்கள் முளைக்கும் அழகான நாற்றுக்களை காண்பான். அதிக வெயில் கடும் மழை படாமல் ஓலைகளால் கூடாரமிடுவான. நாளுக்கு மூன்று முறை நாற்று மேடையைச் சுற்றி வந்து பூச்சி புழுக்களை விரட்டுவான். நச்சுக் கிருமிகள் அணுகாதபடி கவனமாய்க் காப்பாற்றி மீறி வந்த களைகளளைக் களைந்து நாற்றுக்களின் விருத்திக்கு இடம் ஏற்படுத்துவான. நாற்றுக்கள் அழகாய் வளந்திருக்கும் நடுகைக் காலம் வந்ததும் நாற்றுக்களைக் பெயர்த்து தோட்டத்தில் கொத்தி சாறி பசளையிட்டு பதப்படுத்தி தேவையான அளவு இடைவெளி கொண்டு அமைக்கப்பட்ட பாத்திகளில் நட்டு வேருன்றி துளிர்க்கும் வரை பாதுகாத்து நீர் விட்டு கண்ணும் கருத்துமாய் இருந்து தனது முயற்சியின் வெற்றியை உறுதி செய்வான்.

அதுபோல் மனித குல வித்துக்களான குழந்தைகளும் மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் நிறைந்த தாயின் வயிற்றில் கருவாகியது முதல் அவர்களது வாளச்சிக்கும் விருத்திக்கும் தேவையானவை அனைத்தும் வழங்கப்பட்டு வெளி உலகிற்கு வருகின்றனர். அவர்கள் மாறுபட்ட சூழலில் தம்மை தயார்படுத்தும் வரை தாய்ப்பாலுடன் பாதுகாத்து வளர்ச்சியும் படிகளையறிந்து உரிய காலத்திற்கு தேவையான போசாக்கு பாதுகாப்பு நோய்த்தடுப்புகள் வழங்கி வளர்த்து எடுக்கப்படுகிறன்றனர்.

நாற்றுக்கள் பாத்திகளில் நடப்படும் காலம் போன்றே குழந்தைகளின் முன்பள்ளிப் பருவமும் அமைகின்றது. குழந்தையானது கருவிலேயே கற்கின்றது என ஆய்வுகள் கூறுகின்றது .பிறந்த குழந்தையானது வீட்டுச் சூழலிலும் அயற்சூழலிலும் பெறும் அனுபவங்களினூடான கற்றலையும் கல்வி என்றே குறிப்பிடுகின்றோம. இது முறையியல் கல்வி எனப்படும் எனினும் 3 வயது வரை முறையியற் கல்வி கற்று குழந்தை முன்பள்ளிக்கு வந்தபின் ஒரு முறையான கல்வியைப் பெறுகின்றது. முன்பளிக் கல்வி என்பது 3வயதிற்கும் 5வயதிற்னும் இடைப்பட்ட வயதுடைய பிள்ளைகட்டு அவர்களது உடல் உள மனவெளழுச்சி மொழி சமுக ஆளுமை விருத்தியை ஊக்குவிப்பதற்காகவும் அதற்கு உதவுவதற்காகவும் நிதானித்து வடிவமைக்கப்பட்ட குழு ஏற்பாட்டைக் குறிக்கின்றது. இங்கு ஒவ்வொரு குழந்தையும் சமுக இசைவு பெற்றதும் ஒருங்கிணைந்ததுமான ஆழுமையை பெறவும் உதவி செய்யயப்படுகின்றது. முன்பள்ளி கட்கு வரும் சகல சிறு பிள்ளைகளும் ஒரேமாதிரியாகவும் ஒரே குணஇயல்புகள் கொண்டவர்கள்போல் பார்ப்பதற்கு தெரிவர். ஆனால் ஒவ்வொரு பிள்ளைக்கும் அவர் அவர்பால்உள்ள தனி இயல்புகளும் பழக்க வழக்கங்களும் வித்தியாசமானவையாகும். எனவே முன்பள்ளி ஆசிரியைகள் கடமையில் பிள்ளைகளின் சுயகுண இயல்புகளை அறிந்து ஒவ்வொரு பிள்ளையினதும் முழுமையான விருத்திக்கு கைகொடுத்து உதவி வழிகாட்ட வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே முன்பள்ளி ஆசிரியர்கள் தகுந்த பொறுப்புடனும் குழந்தை உளம்பற்றிய அறிவுடையவராகவும் முன்பள்ளிசார் துறையில் நிரம்பிய அறிவுடையவராகவும் தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன் விடயத்தை திட்டமிடவும் திட்டமிட்ட விடயத்தினை ஒன்றிணைந்த அணுகுமுறை மூலம் மற்றய திறன்களை விருத்திக்கான செயற்பாடுகள் விளையாட்டு முயற்சிகள் போன்றவற்றை ஒடுங்குபடுத்தி தூண்டுவதன் மூலம் பிள்ளையின் பூரண அபிவிருத்திக்கு உதவ வேண்டும்

கற்றலுக்கான விடயத்தை தெரிவு செய்து ஒன்றிணைந்த அணுகுமுறையூடாக குழந்தைகட்டு மொழிவிருத்தி ஆக்கம் அழகியற் செயற்பாடுகள் கணித எண்ணக்கரு விருத்தி உடல் அபிவிருத்தி சூழலை புரிந்து கொள்ளும் திறன் சமூக அபிவிருத்தி சமூகமனவெழுச்சி விருத்தி போன்ற விருத்திகளும் நல்லொழுக்கம் சுகாதாரம் போசனை போன்ற விடயங்களும் விருத்தி பெற உதவ வேண்டும்.

**உடல் அபிவிருத்தி-** முன்பள்ளிப் பருவத்தில் முழுமையான அபிவிருத்தி முக்கியமானது. ஆகையால் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பதற்குரிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்ட பல்வேறு செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு பயன்தரும் உண்மையான அனுபவங்கள் திறமையாக கையாளும் விளையாட்டுக்ள ஊடாக உற்சாகப்படுத்தப்படுகின்றது.

**மொழிவிருத்தி-** குழந்தைகளின் உடல் உள சமூக மனவெழுச்சிகள் மொழி விருத்தியைப் பாதிக்கும். ஓரேவிதமாகப் பிள்ளைகளின் மொழி விருத்தி வளர்ச்சியடையவதில்லை. ஆனால் அண்ணளவாக ஒரு ஒழுங்கான விருத்தி அவானிக்கப்படுகின்றது. மொழி விருத்தியில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து, முதலிய நான்கு திறன்களும் திட்டமிட்டு வளர்க்ப்படுகின்றது. குழந்தைகளின் முதிர்ச்சி, விருப்பு, வளர்ச்சிக்கட்டம், ஆகியவற்றிற்கு பொருத்தமான செயற்பாடுகள் மூலம் கவனமாக வழங்கப்படவேண்டும்.

**கணித எண்ணக்கரு விருத்தி:-** குழந்தைகட்கு கணித எண்ணக்கரு விரத்திச் செயற்பாடுகள் செய்யப்படும் போது பியாகெற் எனும் கல்வியியலாளாரல் முன்வைக்கப்பட்ட அறிக்கை விருத்திப் பருவங்களை விளங்கி அதன் பிரசாரம் செயற்படவேண்டும். ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகள் ஊக்குவித்தல் மூலம் முன் கணித எண்ணக்கருவிருத்தியை ஏற்படுத்த முடியும். வகைப்படுத்தல், வடிவங்கள், அவைிடம் /நிலை மாற்றமின்மை, சமச்சீர் வரிசைப்படுத்தல், தொடர்பு படுத்தல், அளவீடு (கொள்வனவு, நிறை நீளம் நேரம் பணம்) பற்றியது. எண்கள் பற்றிய எண்ணகரு ஏற்படுத்தல் என்பன குழந்தைகளின் முன் கணித எண்ணக்கரு விருத்திக்கு தேவையானவையாகக் கருதப்படுவதால் ஒவ்வொரு பிள்ளையும் தனியாள் ஒருவர் என்பதைக் கருத்திற் கொண்டு தனியான பிள்ளைக்கு பொருத்தமான செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

**ஆக்கச்செயற்பாடுகள் அழகிய செயற்பாடுகள்**

ஆக்கச் செற்பாட்டில் குழந்தைச் சித்திரம் எனும்போது அவர்களின் கையாளும் திறன்கள் விருத்தி செய்யப்படவேண்டும. இப்பருவத்தில் குழந்தைகள் ஒழுங்கற்ற கிறுக்கலில் தொடங்கி ஒழுங்கான கிறுக்லுக்கு மாறி பின் வரைதல் நிலைக்கு வருகின்றது. பா பாடல்களை கேட்பதிலும் பாடிப் பரீடசையமாவதிலும் கருவிகளைகப பயன்படுத்துவிலம் விளையாடுவதிலும் மகிழ்ச்சயான சங்கீத செயற்பாடு ஏற்படும். கூச்சமின்றி பேசுதல் மனவெழுச்சிக்காக நாடகம் நடித்தல் அல்லது பொம்மை விளையாட்டுகள் போன்றன பல்வேறு நடத்தைகட்கும் குரல் வளங்களுக்கும் கற்பனைக கதைகளுக்கும் ஊக்கமூட்டுகின்றன.இதே போல் சமூக அபிவிருத்தி மனஎழுச்சி அபிவிருத்தி சூழலை அறிதல் போன்றவற்றையும் திட்டமிட்ட செற்பாடுகளிலும் குழந்தைகட்கு விருத்தி செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பள்ளிகளில் ஆசிரியர் பெற்றோர் நெருங்கிய தொடர்பு அவசியமாகின்றது. முன்பள்ளி கற்பித்தல் முறைச் செயற்பாடுகள் பற்றிய விடயங்கள் பெற்றோர் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. முற்றும் செயற்பாடுகட்கு தேவையான சூழலிலுள்ள பொருட்களைச சேகரித்துக் கொடுப்பதற்கு பெற்றோரும் ஆசிரியரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு வழி நடாத்தப்படும் குழந்தையானது எதிர்காலத்தில் ஆளுமையும் விருத்தியும் மிக்க ஓர் பிரசையாக உருவாகும் என்பது உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிப்பருவம்

**செல்வி.ந.நகுலராணி**
**சமுர்த்திமுகாமையாளர் (தலைமைப்பீடம்)**
**பிரதேச செயலகம் வேலணை.**

ஒரு பிள்ளையின் முதல் எட்டு வருடங்கள் அப்பிள்ளையின் முன்பள்ளி பருவமாக கணிக்கப்படுகின்றது. அதில் முதல் ஐந்து வருடங்கள் விசேடமான காலமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மூளையின் கலங்கள் வளர்வதும் கோடிக்கணக்கான நரம்புக் கலங்கள் இணைப்பை ஏற்படுத்த(synapses) ஒழுங்கமைவதும் இக்காலத்திலேயே ஆகும். பிள்ளைகளின் அபிலாசைகளும், தேவைகளும், பூர்த்தி செய்யப்படுவதே அப்பிள்ளை எதிர்காலத்தில் நற்பிரசையாக ஒழுகுவற்கு அத்திவாரமாக அமைகிறது.

முன்பள்ளி பருவ நிலையில் உள்ள பிள்ளையினது தான்பெறும்அனுபவங்கள் மூலம் திருப்தியடைகின்றது. பிள்ளையின் தன்னம்பிக்கை, சுயமதிப்பு, தானே தீர்மானம்எடுத்தல்,போன்ற நற்பண்புகளை கட்டியெழுப்புவது எல்லோரினதும் பொறுப்பாகும்.

பிள்ளையானது சிறந்த முறையில் வழிகாட்டப்பட வேண்டும். வழிகாட்டலிலேயே பிள்ளையின் எதிர்காலம் தங்கியுள்ளது. அந்தவகையிலே கீழ்வரும் நிலமைகளை வளர்ப்பதில் வழிகாட்டப்பட வேண்டும்.

பிள்ளையின் கருத்துக்களை வெளிக்காட்ட சந்தர்ப்பம் வழங்கல்.

- பிள்ளையின் திறமைகளைக் கண்டறிந்து அவற்றை மதிப்பீடு செய்து போற்றுதல் வேண்டும்.
- சில தீர்மானங்களை எடுக்கும் போது பிள்ளைகளின் கருத்துக்களுக்கும் சந்தர்ப்பம்வழங்குதல் வேண்டும்.
- பிள்ளைகளுக்கு தீர்மானம் எடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும்.
- "தன்னையும் பிறர் மதிக்கின்றார்கள்" என்ற எண்ணத்தை பிள்ளையின் மனதில் எழச்செய்தல் வேண்டும்.
- பிள்ளையின் இயக்கத்திறனை வளர்ப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.
- சூழலின் மூலம் அனுபவங்களைப் பெறுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும்.

**முன்பள்ளிப் பிள்ளையின் சமூக வளர்ச்சிக்குத் தேவையானவை**

உறவினரையோ, நண்பர்களையோ, சந்திக்கச் செல்லும்போது பிள்ளைகளையும் அழைத்துச் செல்லுதல் வேண்டும்.

பிள்ளைகளுக்கு விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் பங்கு பற்றுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பல விதமான செயற்பாடுகளை விருப்பப்படி செய்ய அனுமதித்தல்.
- சம வயதுக்குழுவினருடன் விளையாடுவதற்கு சந்தர்ப்பம் அளித்தல்.
- கதைகளைக் கூறுதல் அக்கதையில் உள்ள உணர்ச்சிகரமான பகுதிகளை விளக்குதல்.
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் நன்மை தீமைகளைப்பற்றி பிள்ளையுடன் கலந்துரையாடல்.
- களிமண்ணுடனும் கிளேயுடனும் சந்தோசமாக விளையாடச் செய்தல். விளையாடிய பின் அவ்விடத்தையும் தன்னையும் சுத்தப்படுத்த பழக்குதல்.
- சுகாதாரப் பழக்கவழக்கங்களை வழங்குதல்.
- இதுஅறியும்பருவமாகையால் பலவற்றைக்கற்பதற்கும் அனுபவங்களை பெறுவதற்கும், சந்தர்ப்பம் அளித்தல்.
- கலைநிகழ்ச்சியில் ஈடுபடச்செய்தல்.
- பிள்ளையைச் சுற்றி யுள்ள உலகை அறியச் செய்தல்.
- பிள்ளையால் தனியாகச் செய்யக்கூடிய காரியங்ளைச் செய்யச் செய்தல்.
- புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டறிவதற்கு பின்னணியைத் தூண்டுதல்.

வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான காலமாக விளங்குவது முன்பள்ளிப்பருவமாகும். இக்காலத்திலே பிள்ளைகளின் திறமைகளை கவனத்தில் எடுப்பது மட்டுமன்றி தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும். இது மட்டுமன்றி பிள்ளையின் பாதுகாப்பிலும் அன்பிலும் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். இவற்றிலே் பிள்ளையின் எதிர்காலம் தங்கியுள்ளது.

பிள்ளை பிறந்ததில் இருந்து பெரியோரும் பெற்றோரும் காட்டும் ஒவ்வொரு நடவடிக்கைகளும் செய்கைகளும் உணர்ச்சியூட்டும் சம்பவங்களும் அதன் மூளைவளர்ச்சிக்கு பெரும் மாற்றத்ததை தரக்கூடியதாக விளங்கும். இதே போன்று புறக்கணிப்பு ஆத்திரமூட்டும் செயல்கள் போன்றவையும் பிள்ளையை பலவீனத்திற்கு உட்படுத்தும்.

நம் முன்னோர் குழந்தை ஒன்று குடும்பத்தில் பிறந்து விட்டால் அதைக் கடவுளின் கொடை எனக்கருதி தாயினதும், குழந்தையினதும், தேவைகளையும் அபிலாசைகளையும் சுற்றத்தினரும் உறவினரும் பூர்த்தி செயவ்து கட்டாய கடமையாய் இருந்தது. இதன் மூலம் குழந்தை முதியோரினதும், பெரியோரினதும், சரியான வழிகாட்டலிலும் அனுபவத்திலும் வளர்ந்தது. இதனால் சிறந்த உடல் வளர்ச்சியுடன் நல்ல அறிவையும் பெற்றுக் கொண்ட குழந்தையாக திகழ்கின்றது.

எனவே குழந்தையொன்றின் பிறப்பில் உள்ள திறமைகளை கவனத்தில் எடுக்காவிட்டால் எதிர்காலம் கவலைக்குரியதாக அமைந்துவிடும். அவ்வாறு செய்யாது விடின் பிள்ளையை எதிர்காலத்தில் சிறுவர் துஸ்பிரயோகம் போன்ற பலவீனமான கெடுதலான செயல்களுக்கு இட்டுச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் இடையிலான தொடர்பு

திருமதி.ம.சுதாஜினி
வேலணை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர்

முன்பள்ளிஎன்பது 3வயதிற்கும் 5வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகள் ஒன்று கூடும் இடமாகும். இதனை ஒருநியமமுறை பள்ளியாக கொள்ளாது இயற்கை கூடமாகவும் அழகியல் மாடமாகவும் சிறுவர் விளையாட்டுத்திடலாகவும் கொள்ள வேண்டும் இங்கு பூக்களை நாடிவரும் வண்டு போல் பிள்ளைகள் ஓடிவந்து கூட வேண்டும்.. பிள்ளைகள் கவரப்படவேண்டும். தன் தொடர்பாடல் திறனை வளர்க்க வேண்டும். வழிகாட்டப்பட வேண்டும் சூழலுடன் இணைய வேண்டும் அக்கூடம் ஆனந்த மயமாக வேண்டும் இதுவே முன்பள்ளி ஆகும்.

## முன்பள்ளி ஆசிரியர் பெற்றோர் தொடர்பு

ஒரு குழந்தையின் முதல் ஆசான் பெற்றோரே பெற்றோரின் பொறுப்பு ஒரு குழந்தை கருக் கொண்ட நாள் முதல் தொடங்கி விடுகின்றது. இந்த வகையில்தொடர்புறும் தொடர்பானது அக்குழந்தையின் தன்னம்பிக்கையையும் சுய கௌரவத்தையும் பெற்றுக்கொள்வதற்கான உகந்த வாய்ப்பை அமைக்கின்றது எனலாம்.

குழந்தைகள் 2 -3 வயதில் முன்பள்ளியில் அதாவது தனது கல்வி என்னும் அத்திவாரத்தில் இணைந்து கொள்கிறார்கள். அது வரை தன் வீட்டையும் அதன் சுற்றாடலையும் அறிந்து பழகிய குழ்ந்தை இப்போது முன்பள்ளி மாணவன் என்ற அந்தஸ்துடன் தன்னை ஒத்த சிறாருடன் ஒரு தனித்தன்மையும் ஆளுமையும் கொண்ட பயிற்றப்பட்ட ஆசிரியரின் பராமரிப்பிலும் வீட்டுக்கு புறம்பான பழக்க மற்ற சூழலிலும் விடப்படும் போது அவனிடம் இருந்த தன்னம்பிக்கை மறைகிறது. அவனுக்கு வீட்டில் இருந்த அன்பு பாதுகாப்பு என்பன இங்கே கிடைக்குமா என்பதே அவனது ஏக்கம். வீட்டைப்போல ஓடியாடி விளையாட முடியதா? என நினைக்கிறான். இதனால் தற்பாதுகாப்புக்காக எதிர்க்கிறான். தனது எதிர்பார்ப்புக்களை அடைய முனைகின்றான். அதே நேரம் வசதியற்ற சூழலில் இருந்து வரும் குழந்தைகள் கிடைக்கும் வசதிகளை அனுபவிக்கும் ஆசையில் மிகச் சுதந்திதரமாக செயல்படுவதும் உண்டு.

எனவே ஆசிரியர்கள் குழந்தைகள் முன்பள்ளிக்கு சமூகமளித்ததும் அன்போடு வரவேற்று இன்முகத்துடன் அரவணைத்து மற்றுமோர் தாயை ஆசிரியரில் கண்டுணரச் செய்தல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் பிள்ளையின் தேவைகளையும் அதன் பிரச்சினைகளையும் அறிந்து முன்பள்ளிக்கு ஏற்ற வகையில் அதன் தன்மையை அனுசரித்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும். முன்பள்ளி அவனது அன்புக்கும் ஆக்கத்திற்கும் சுதந்திதரத்ததிற்கும் ஓர் இடமாகவும் ஆசிரியர் அன்னையாகவும் சகமாணவர்கள் அவர்களின் சகோதர்களாகவும் அவன் கணிக்கத் தொடங்கி விடுவான். அதற்கேற்றதாக சூழலை தக்க மாதிரி உருவாக்க வேண்டும். பிள்ளையை முழுமையாக விளங்கிக்க கொள்ளும்பொருட்டு பொறுப்பேற்கும் போதே பெற்றோரிடம் இருந்து அவனைப்பற்றிய முழுவிபரங்களையும் அதாவது நடை முறைகள் சுகநிலை பண்புகள் முதலியவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.குழந்தையின் உடை உள மனோபாவங்களையும் அவற்றின் வளர்ச்சி முறைகள் அவனது வீடு சூழல் அயல் சமூக பொருளாதராம் சமயம் குடும்ப அங்கத்தவர்களின் விசேட குறிப்புக்கள் என்பன குழந்தையை வழிநடத்த உதவும். இத்தகைய விளக்கங்களை நல்ல சுமுகமான மனம் நிறைந்த சூழ்நிலையில் பெற்றோரிடம் இருந்து ஆசிரியர் பெற்றுக்கொள் வேண்டும்.
பிள்ளைகளின் நல்ல வாழ்க்கைக்கான வளர்ச்சியும் அபிவிருத்தியும் உயர் மட்டத்திற்கு கொண்டு செல்வது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும். இந்த வகையில் ஓர் முன்பள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பிள்ளைகளின் அபிவிருத்தியினை மேம்பாடு அடையச் செய்வதற்கு பெற்றோரின் முழுமையான பங்களிப்பை பெறுவது அவசியமாகிறது.எனவே ஒவ்வொரு நாளும் பிள்ளையை முன்பள்ளிக்கு கொண்டு வரும் போது ஆசியரைச் சந்தித்து தனது பிள்ளையின் விருத்தி தொடர்பாக கலந்து உரையாடுவது பிள்ளையின் முன்னேற்றத்ததிற்கு பெரும் பங்களிப்புச் செய்வதாக அமையும்.

பெற்றோர் இன்றி முழுமையான செயற்பாட்டினை முன்பள்ளியில் செயலாற்ற முடியாத நிலை உருவாகின்றது. எனவே தான் முன்பள்ளி அசிரியர்கள் பெற்றோர்கள் இடையிலான சுமுகமான உறவு கட்டியெழுப்பப்படல்வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. பெற்றோரின் வலுவான பங்களிப்பும் முன்பள்ளி ஆசிரியரின் இடையறாத செயற்பாடும் முன்பள்ளியினை வலுவாக கட்டியெழுப்பும் என்பதே உறுதியானதாகின்றது.

முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் இடத்தில் பாரபட்சம் காட்டாதவராக எல்லா மாணவர்களையும் சமமாக மதிப்பவராக மாற்றுத்தாயாக சகல கலா வல்லவராத் திகழ்வதுடன் முன் நின்று செயற்பாடு ஆற்றக்கூடியவராக மாணவர்களைக் கவரக்கூடியவராக அவரது கருத்துக்கு மதிப்பளிப்பவராக பெற்றோரை செயற்படுத்தக்யுகூடியவராக காணப்படல் வேண்டும்.

அதே போல் முன்பள்ளி பெற்றோரும் ஆசிரியர்களின் தேவைகளை இனங்கண்டு அறிந்து அதற்கேற்ப தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.அதாவது பிள்ளைகளின் செயற்பாட்டிற்குத் தேவையான பொருட்கள் அதற்கு தங்களின் சரீர பங்களிப்பு என்பன முக்கியமானவையாகும். அதாவது பெற்றோர்கள் அறிந்து இருக்க வேண்டியது ஆசிரியர் பதவி நியமனம் ஆசிரியர் பயிற்சி பௌதீக வள ஏற்பாடு ஆசிரியர் வேதனம் சுகாதார வைத்திய சேவை சத்துணவு பதிவேட்டு அறிக்கை என்பனவாகும்.முன்பள்ளியின் அபிவிருத்திக்கு பெற்றோரின் அபிவிருத்தியும் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

பெற்றோர்கள் வளங்களின் திறவுகோல் பெற்றோர்கள் ஒத்தாசை வளங்கவும் முன்பள்ளியில் இருந்து பல வற்றை கற்றுக்கொள்ளவும் சந்தர்ப்பம் உண்டு. பெற்றோரின் ஈடுபாடு பங்களிப்பு நிதிசேகரித்தல் முன்பள்ளிகளில் ஆசிரியர்களை நியமித்தல் போன்றன தொடக்கம் முகாமைத்துவம் வரை பரந்து பட்டது.வெவ்வேறு நேரங்களில் சந்ததர்ப்ப சூழ்நிலை விருப்புக்கேற்ற பெற்றோரின் செயற்பாடுகள் அமையும்.

**முன்பள்ளியின் அன்றைய நிலை**

தொடக்க கால முன்பள்ளிகள் வறுமையான பெற்றோர்களின் பிள்ளைகளை பெற்றோரின் ஒழுக்க குறைபாடுகளில் இருந்து மீட்கவே ஆரம்பித்து முன்பள்ளிகளாக ஏற்படுத்தப்பட்டன.

**முன்பள்ளியின் இன்றைய நிலை**

பிள்ளையின் உடல் உள(சூழல்)சமூக பொருளாதார குடும்ப அயல் விபரங்களை பெற்றோரிடம் இருந்து அறிந்து கொள்ளவும் பிள்ளையின் முழுமையான ஆளுமையை உருவாக்கிக் கொள்ளவும் காணப்படுகின்றன.

**முன்பள்ளிகளின் அவசியம்**

பிள்ளைகளிற்கு ஏற்ற தேவைகளை இனங்கண்டு அத்தேவைகளை நிறைவு செய்யும் செயற்பாடுகளை திட்டமிட்டு சுயவிருத்தி அடையசந்தர்ப்பம் அளிக்கின்றன. சுற்றாடலில் உள்ள பொருட்களை பயன்படுத்தி பிள்ளைகளின் ஆக்கத்திறன் விருத்திக்கு சந்தர்ப்பம் அளிகின்றது.

ஏனைய பிள்ளைகளுடன் இணைந்து பழகுவதற்கும்,வளர்ந்தவர்களோடும் மற்றைய பிள்ளைகளோடும், பெற்றோர் பழகுவதற்கும், சந்தர்ப்பம் அளிக்கின்றது.புரிந்து உணர்வு ஏற்படுகின்றது. அறிவாற்றல் விருத்தி செய்வதற்கான அனுபவங்களை வழங்குகின்றது.
குற்றல் வாய்ப்புக்களும் விளையாட்டு விளையாட்டின் ஊடாக செயற்பாடுகளிலும் ஈடுபடுவதன் ஊடாக பிள்ளைகள் முழுமையாக ஆர்வத்துடன் முழுமையாக செயல்களில் ஈடுபட முன்பள்ளிகள் உதவுகின்றன எனலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "முன்ள்ளி ஆசிரியர் தாய் போன்ற இயல்பினை" கொண்டவரர்கள்

செல்வி .மேர்வின் டயானா
சரத்ஜுவன் தரிசனம் மழலைகள் முன்பள்ளி

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை பள்ளிவரும் பிஞ்சுப் பாலகனாய் அவன் தன்னந் தனிமையை போக்கி அவன் .உள்ளத்தில் அன்பை ஊட்ட வேண்டும்." அன்னையின் மடியில் அவள் அரவணைப்பில் வளர்கின்ற குழந்தை மூன்று வயதில் முன்பள்ளிக்கு அனுப்பிவைக்கப் படுகின்றான்.

இந்த பாலகனை மூன்று தொடக்கம் ஐந்து வயது வரை ஆரம்பக்கல்வி புகட்டும் ஆசானுடைய ஆரவனைப்பிலும் அன்பிலுமே வளர்ச்சியடைய செய்ய வேண்டியுள்ளதால் பிள்ளை தாயின் மடியிலிருந்து ஆசிரியரின் மடிக்கு "மடிமற்றம்" செய்யப்படுகின்றது.

அந்த வகையில் ஆசிரியரானவள் **தாய்மை** இயல்பை கொண்டவளாக மாறவேண்டும். என்பது மறுக்கமுடியாத உண்மையே. பெண் என்பவள் கருத்தாங்கி ஒரு மகவைப் பெற்றெடுத்தால் தான் அவள் "தாய்" என்று பெயர் பெறுகின்றாள். "அம்மா" என்ற சொல்லை விட எதுவுமே பெரியதல்ல அதற்கு "தாயிற் சிறந்த கோவிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற கருத்தை சிந்திக்கின்ற போது தாயை விட சிறந்தது எதுவுமே கிடையது.

ஓவ்வெரு குழந்தையையும் கட்டி அரவனைத்து முத்தமிட்டு அன்பைக் கொடுப்பது தாயனவள். அதே போல் முள்பள்ளி ஆசிரியர்களும் தாய்க்கு சமனானவர்கள். ஆரம்பபாடசாலை எந்தவொரு வாத்தியராலும் கற்பிப்பதில்லை காரணம் தாயிடம் உள்ள அன்பும் அரவணைப்பும் ஆசிரியனிடம்இருந்து வருவதில்லை என்பது உண்மையே அந்த உண்மைக்கு இலக்கணமாக **ஆசிரியை ஒருவராலேயே ஆரம்பபாடசாலை வளர்ச்சியடைய முடியும்.**

முன்பள்ளி ஆசிரியர்கள் தாய் போன்ற இயல்பை நிச்சயமாக கொண்டிருக்க வேண்டும். காரணம் முன்பள்ளிக்கு வருகின்றவர்கள் குழந்தைச் செல்வங்களே. ஒரு குழந்தையை அரவணைக்க வேண்டியது தாயின் கடமையும் பொறுப்பும் அதேபோல் முன்பள்ளிப் பாலகர்களை அரவணைப்பது முன்பள்ளி ஆசிரியர்களே.

முன்பள்ளி ஆசிரியர்களை பொறுத்தமட்டில் குழந்தைகளை அள்ளி அணைத்து முகமலர்ச்சியோடு வரவேற்று பிள்ளையின் மனநிலையையும் பிள்ளையின் உள செயற்பாடுகளையும் அறிந்து செயற்பட வேண்டும். ஆசிரியை ஒருவரிடம் தான் பாசம் இரக்கம் பணிவு பொறுமை தாழ்மை மனப்பக்குவம் பெற்றொர் பெரியோரை மதிக்கும் திறன் தன்நம்பிக்கை ஆளுமை சுகாதார பழக்கவழக்கம ஆரோக்கியமான ஆன்மீகம் பாகுபாடு காட்டாமை பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்ளுதல் தாய்மை உணர்வு போன்ற பல்வேறுபட்ட இயல்புகளை நாம் காண முடியும்.

அந்த வகையில் பொதுவான ஆசிரியரின் இயல்பு தாய்மையே. அதற்கிணங்க தன்னை பிள்ளைகளின் வளர்ச்சியப்படிக்கு அடிஅத்திவாரமும் நாற்றுமேடையும் போடுவதற்காகவே தன்னை தாயாக மாற்றிக் கொள்கின்றாள்.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" வார்த்தைக் கிணங்க ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு பிள்ளைக்கும் தெய்வமாக விளங்குகிறார். தாய் தன் குழந்தையை ஆசிரியரிடம் கொண்டு வந்து விடும்போது அந்த தாய் எனது பிள்ளையையும் தாய்க்கு தாயாக வைத்துப் பார்ப்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற எண்ணத்துடனே விடுகிறார்கள். ஆனால் அந்தப் பிள்ளை ஆசிரியரோடு சேர்ந்து மகிழ்ச்சியான சந்தோசம் அடைவதை பாாக்கும் போது தான் ஒவ்வொரு பெற்றோரும் மகிழ்ச்சியடைவார்கள்.

பெற்றோா் பெரியோரின் மதிப்பு ஆசிரியர்களுக்கு கிடைப்பது ஒவ்வொரு ஆசிரியரின் தாய்மை உணர்வாலேயே அன்றி வேறு எதையும் கூறிவிட முடியாது. முன்பள்ளியில் ஆசிரியர் தாய்மை நிலைக்கு உயர்தப்பட்டு செயற்படுவதனால் தான் பிள்ளைகள் ஒவ்வொருவரின் உளதேவைளையும் உள்ளத்து உணர்வுகள் பிள்ளைகளின் அறிவாற்றல, திறன்கள் என்பவற்றை கண்டுணரமுடியும். முன்பள்ளிப் பிள்ளையிடம் நேரடியாகவோ மறைமுகமாகவோ எதையும் அறிந்து கொள்ள முடியாது. மாறாக பிள்ளைகளை அரவணைத்து பக்குவமாக பாதுகாத்து அவர்கள் கூடவே அமர்ந்திருந்து ஆடல் பாடல்கள் விளையாட்டுக்களை சொல்லிக் கொடுத்யது அவர்களை மகிழ்ச்சிப்படுத்தினால் பெற்றோரை மறந்து ஆசிரியர்கள் தான் எனது தாய் என்ற உணர்வை அறிந்து கொள்ளும். "எந்த குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தைகளே" அவர்கள் நல்லவர் ஆவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்ற சிந்தனைக்கு அடித்தளமாக அமைபவள் தாயே. தாயோடு மட்டும் நின்று விடுவதில்லை தாய் என்ற படியைத் தாண்டி ஆசிரியரின் மடியில் வருகின்றார்கள். அந்த ஆசிரியரும் நல்ல குழந்தையாக ஆரோக்கியமான குழந்தையாவும் ஆற்றல் நிறைந்த குழந்தையாகவும் உருவாக்குகின்றாள்

தாய் என்பவள் நம்பிக்கையை ஊட்டிவிடுகிறாள். அதே நம்பிக்கையை வளர்த்தெடுக்கின்றார்கள் முன்பள்ளி ஆசிரியர்கள். காரணம் இந்த ஆசிரியரும் எனது அம்மாவைப் போன்றவர் என்ற நிலையை உணர்வதால் தான் பிள்ளை காலையில் எட்டு மணிக்கு வருவது வீடு செல்லும் போது பன்னிரண்டு மணிக்கு போகின்றது. இந்த ஐந்து மணித்தியாலயமும் தாயாக அரவணைப்பது இந்த ஆசிரியரே.

ஒவ்வொரு பிள்ளையும் ஆசிரியரின் மடியிலமர்ந்து தனது மழைலை மொழியை கதைப்பதற்கு ஆரம்பிப்தற்கான காணரத்தை நோக்கும் போது அந்த பிள்ளைள் எனது ஆசிரியர் நல்லவர் அன்புள்ளவர் என உணர்ந்து கொள்வதனாலேயே தன்னை கொஞ்சமாக வெளிக் கொணர்கிறது.

பிள்ளையின் ஆரோக்கியமான வாழ்விற்கு முன்பள்ளி ஆசிரியர் தாயாக செயற்படுவதானல் முன்பள்ளிக்கு வருகைதந்த அந்தப் பிள்ளை ஆசிரியரின் வழி நடத்தல்அவருடைய அசைவுகள் அவருடைய பேச்சுத் திறன் கேட்டல் என்வபற்றை ஒவ்வொரு நாட்களுமே அவதானிப்பதனாலேயே அந்தக் குழந்தை பேசத் தொடங்குகின்றது. இதற்கெல்லாம் காரணமானவள் இந்த ஆசியரே. பின்னர் பல தடவைகள் தன்னால் இயன்ற சொற்களை பேசத் தொடங்கிய பிள்ளை சில நாட்களுக்குப் பின் ஆசிரியரின் கைகளில் பயன்படுத்தப்படுகின்ற எழுது கருவிகள் வண்ணநிற வெண்கட்டிகள் என்பவற்றை தொட்டுணர்ந்து எழுதுவதற்காக தனது கையால் பென்சிலை பிடிக்க எத்தணிக்ககின்றான் இரண்டாவது படியாக குழந்தைஆசிரியரின் வழிநடத்தலில் வாசிக்க எத்தணிக்கின்றான்..

காலப் போக்கில் அந்தக் குழந்தை வாசிப்பதற்காக ஆசிரியர் சிறுவர் மலர்கள் அழகிய வர்ணக் கலையுள்ள புத்தகங்களை பிள்ளையிடம் காட்டி அவரிடம் அந்த புத்தகங்களை கொடுத்து பாடங்களை பார்க்க சொல்லிக் கொடுத்து எழுத்துக்களை அவதானிக்கும் படி கூறி வாசிப்பை வளர்த்து கொள்ள துணையாக இருப்பதனால் பிள்ளை உச்சரித்து வாசிக்க தொடங்குகின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் பிள்ளைகள் எழுத்துக்களை கற்பதற்காக கொப்பிகளை பயன்படுத்த ஐந்து வயதிற்குப் பயிற்சிகளை வளங்குவதானல் பிள்ளை எழுத தொடங்குகினறது. இதற்கு எல்லாம் அடித்தளமிட்டு கொடுப்பவள் இந்த தாய்மை உணர்வுடைய ஆசானே.

பிள்ளையின் புலன்களை அறிந்து கொள்ள துணையாக நிற்பவள் ஆசிரியர் ஏன் என்றால் கேட்டல் உணர்வு வரவேண்டுமானால் பாடல்களை அதுவும் பிள்ளைகளின் மனதை கொள்ளை கொள்ளக்கூடிய பாடலகளாக அமைய வேண்டும. இந்தப் பாடல்களை தமது செவிப்புலனால் கேட்பதற்கு ஆசிரியரின் பாடும் திறனே காரணமாக அமைகிறது.

அதேபோன்று பார்பதற்காக பிள்ளைகளின் கண்குளிர்ச்சியாக அமைய பாடங்கள் நடனம் போன்றவற்றை ஆடுதல் நிறங்கள் வடிவங்களை காண்பித்தல் போன்றவற்றாலும் பிள்ளையின் ஆற்றலை வளர்க்க இந்த ஆசிரியரே துணைநிற்கின்றார்.

பிள்ளையின் உணர்வுகள் அனைத்தும் பிஞ்சு மனமாகவே காணப்படும். இந்த உணர்வை கொஞ்சம் கொஞ்சமாக வளர்க்க ஆசிரியர் தன்னை மெழுகுபோல உருக்க வேண்டியள்ளது. காரணம் பாடசாலைகளில் பிள்ளைகளை கற்றறியச் செய்வதற்காக வாய்மொழி பரீட்சைகள் செயற்றிட்டங்கள் என்பவற்றை பிள்ளைகள் அறிந்துகொள்வதற்காக ஆசிரியர்கள் வழிகாட்டிவிடுவார்கள்.

ஆனால் முன்பள்ளி கற்பித்தலானது அவ்வாறக இல்லை மாறாக ஒவ்வொரு பிள்ளையும் நாற்றுக்களாகவே இ:ருக்கின்றார்கள். அந்த நாற்று வளர்வதற்கு அடி அத்திவராமாக ஆசிரியர்களே செயலாற்ற வேண்டிய கட்டாயமொன்று உண்டு

ஆசிரியரிடமே கடமை, கண்ணியம், பொறுப்பணர்வு, வழிநடத்தல்இ போன்ற நற்பண்புகள் உண்டு அதற்கும் மேலாக தாய்மை உணர்வும் உண்டு. பிள்ளை பிள்ளையாக வாழ முன்பள்ளி ஆசிரியர்கள் தாயக மாறி செயற்படுவதால் தான் பிள்ளையின் கல்வி அறிவு வளர்ச்சியடைகிறது.

முன்பள்ளி ஆசிரியர்கள் தமது உயர் ஆளுமை அறிவு புகழ் தற்பெருமை போன்ற காரணங்களினால் பிள்ளையை நல்ல நிலைக்கு கொண்டுவர முடியாது. ஆசிரியரானவர் பிள்ளைகளின் உணர்வுகளை அறிய தாய்மை இயல்பையே அடைய வேண்டும். என்பது உண்மை அந்த உண்மையை கைக்கொண்டு நடந்தால் ஒவ்வொரு மழைலையும் மாணாக்கனாக சிறந்த புத்திஜீவிகளாக உருவாக்க முடியும்

ஆகவே முன்பள்ளியின் ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு குழந்தைக்கும் தாயே அவள் உணரும் தன்மையுள்ளவள். பிள்ளைகளை பக்குவமகாக வளர்க்கும் தன்மையுள்ளவள். பெண்களுக்கு மட்டும் பிள்ளைகளை பராமரிக்கும் பொறுப்பும் அதிகம் உண்டு. அந்த பெண்மைதான் மழலைகளை பெரியபெரிய மகான்களாக உருவாக்க வழிவகுக்கின்றன. முன்பள்ளி ஆசிரியர்கள்அனைவருமே தாயாகும் பாக்கியம் பெற்றவர்கள். காரணம் குழந்தை அதுவும் பாலர் ப.ருவத்தை பாதுகாத்து அரவணைப்தனால்.

எனவே மேற்கணட்வற்றோடு தொகுத்து நோக்கும் போது ஒவ்வொரு முன்பள்ளி ஆசியரும் தாய் போன்ற உணர்வு கொண்டவராகவே அமைவதனால் தான் குழந்தை செல்வங்களை வளர்ச்சியடையச் செய்யமுடியும். அவர்களின் உள உணர்வுகள் என்பவற்றை விளங்கிக் கொள்ள முடியும். ஆசிரியை தாய்மை உணர்வு படைத்தவள் அவளாலே உலகம் வாழ்கின்றது. அவளே உலகத்தின் தாய் போன்றவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மேற்கண்டவற்றோடு தொகுத்து நோக்கும் போது ஒவ்வொரு முன்பள்ளி ஆசிரியரும் தாய் :போன்ற உணர்வு கொண்டவராகவே அமைவதனால் தான் குழந்தை செல்வங்களை வளர்ச்சியடைய செய்யமுடியும். அவர்களின் உள உணர்வுகள் என்பவற்றை விளங்கிக்கொள்ள முடியும் ஆசிரியையிடையே தாய்மை உணர்வு படைத்தவள் அவளாலே உலகம் வாழ்கின்றது அவளே தாய் போன்றவள்.

**"முன்பள்ளி ஆசிரியர் தாய் போன்ற இயல்பை உடையவள்" எனும்வினாவிற்கு பல முன்பள்ளி ஆசிரியர்கள் கட்டுரை எழுதியுள்ளனர். அவற்றில் மிகச் சிறந்த கட்டுரையாக இக்கட்டுரை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "முன்பள்ளிக் கல்வியே வாழ்க்கையின் உரம்"

திருமதி. ஞானராஜ் பாலேஸ்வரி
புங்குடுதீவு தெற்கு மாதர் கிராம அபிவிருத்திஐ சங்க முன்பள்ளி

"கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

எனும் வள்ளுவன் கூற்றுக்கிணங்க கல்வி என்பது அதனை ஆழமாக அனுபவிப்பவனுக்கும் அதனை ஆர்வத்துடன் கற்பவனுக்குமே அதனுடைய மகத்துவம், மகிமை விளங்கும். அந்த வகையில் முன்பள்ளி வாழ்க்கை என்பது ஒரு அற்புதமான அதிசயமான துடிதுடிப்புள்ள ஒரு பருவமாகும். இந்த முன்பள்ளி சிறார்களை நாம் நாற்றுமேடைக்கு ஒப்பிடலாம். ஏனெனில் இவர்கள் பயமறியாத வஞ்சகமில்லாத பிஞ்சு நெஞ்சு எதைச் சொல்கின்றோமோ அதையே சரி என்று கூறும் தூய மனம் கொண்டவர்கள். இவர்களை நாற்று மேடை என்று ஒப்பிடுவதே சிறந்தது எனலாம். நாம் பயனுள்ள வளமான பசளைகள் நிறைந்த ஒரு நல்ல நிலத்தில் அதனைப் பயன்படுத்தி விதை போடுகின்றோமோ அப்போதுதான் அதில் இடப்படும் விதையும் நமக்கு பயனளிக்கும். நல்ல விளைச்சலையும் தரும்.

அதே போன்றுதான் நாம் இந்த பிஞ்சு உள்ளங்களுக்கு எதனைக் கற்பிக்கின்றோமோ, எதனை ஊட்டுகின்றோமோ அது அப்பிள்ளையின் மனதில் பசுமரத்தாணி போன்று பதிந்து விடுகின்றது. பாடசாலையில் ஆசிரியர் என்ன சொல்கின்றாரோ அதனை அந்த மாணவனோ மாணவியோ தன் பெற்றோரிடம் சரி இல்லையெனில் சுற்றத்தாரிடமோ, உறவினரிடமோ சொல்லும். இப்படித்தான் எங்க ரீச்சர் சொல்லித் தந்தவா நீங்கள் பிழையாய் சொல்லுறீங்க என்று கூறி அடம்பிடிக்கும். ஆகவேதான் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் முன் ஆசிரியர் தன்னை பூரண ஆயத்தம் செய்தல் வேண்டும். ஏதாவது பிழையாக கூறிவிட்டால் பெற்றோர் அதை சரியாக சொன்னாலும் பிள்ளை அதனை நம்ப மறுக்கும். ஏனென்றால் பிள்ளை ஆசிரியரில் வைத்துள்ள நம்பிக்கை எனலாம்.

மற்றும் ஆசிரியரின் செயற்பாடுகள் அரவணைப்பு போன்றவற்றை பிள்ளை எதிர்பார்க்கும் அளவிற்கு ஆசிரியர் பிள்ளையில் அக்கறை செலுத்துவாரெனின் அந்த பிள்ளையும் ஆசிரியர் எவ்வாறு செயற்படுகின்றார் என்பதனை அவதானித்து அவரை பின்பற்ற முயற்சி செய்யும். அதே போன்று இந்த சின்னஞ்சிறார்களுக்கு கல்வியை புகட்டுவது என்பது கடினமாக இருந்தாலும் கூட அதனை ஒவ்வொரு பிள்ளைக்கு ஏற்ற வகையில் புகட்டுவது மிகவும் அவசியமானதொன்றாகும்.

ஆசிரியர் ஒரு பிள்ளையிடம் வாய் மூலமாக கேட்கும் வினாக்களிற்கு விடையளிக்கின்றான். ஆனால் எழுதி விடும் போது அவன் அந்த பயிற்சியை அல்லது செயற்பாட்டை செய்ய மறுக்கின்றான். இதற்கு காரணம் என்ன என்று தெரியாமல் அந்த மாணவனை தண்டிப்பது தவறாகும். ஏன் அவன் கண் பார்வை குறைவானவனாக இருக்கின்றான். எழுத முடியவில்லை. இன்னுமொருவன் எழுத முடியும். ஆனால் அவனால் ஆசிரியர் சொல்வதனை நன்றாக உணரமுடியாது. எனவே பிள்ளையிடம் குறைகள் இருப்பின் அதற்கான சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவனால் தொடர்ந்து படிக்க முடியும். சில பிள்ளைகள் படிப்பில் மிகவும் ஆர்வம் காட்டுவர்.எதனையும் அறிய வேண்டும் என ஆசைப்படுவர்.ஆனால் ஏதோ ஒன்று அவர்களைத் தடுக்கும். பயம் அல்லது கூச்ச உணர்வு, அவர்களது குடும்ப வறுமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது குறைபாடு, என்று ஏதோ ஒரு பிரச்சனை அவர்களுக்குள்ளே ஊசலாடிக் கொண்டு இருக்கும். இவற்றை இந்த வயதிலேயே இப் பிரச்சனைக்கு தீர்வு காண விட்டால் அந்த பிள்ளையின் நிலை பின்னோக்கிச் செல்லும், பின்தங்கிச் செல்கின்றது என்பதனை அறிந்து அவர்களுக்கு ஏற்ற வகையில் கற்ப்பிக்க முயல வேண்டும்.பிள்ளை எப்படி ஒரு ஆசிரியர் கற்ப்பிக்கவேண்டும் என விரும்புகின்றதோ அவ்வாறு அந்த எதிர்பார்ப்பு கிடைக்கவில்லை எனின் தனது செய்கை நடத்தையின் மூலம் வெளிப்படுத்தும்.

ரீச்சர் விளையாடுவோம் பாடுவோம் படம் காட்டுங்கள் கதை சொல்லுங்கள் என்று தனது விருப்பங்களை வெளிப்படுததுவார்கள்.அவர்கள் தாமாகவே வரைவதற்கோ நிறம் தீட்டுவதற்கோ முன்வரும் போது அவர்களை தட்டிக் கொடுத்து பாராட்டுதல் மிக மிக முக்கியமானது அத்தோடு அவர்களின் மனங்களை புண்படுத்தாது நடந்து கொள்வதிலும் கூடிய கவனம் எடுக்க வேண்டிய கடமையும் எமக்குண்டு.

ஒரு மாணவனை தனியே படிப்பில் மட்டுமல்லாது விளையாட்டு ஒழுக்கம் நற்பண்பு உள்ளவனாக்குவது இந்த முன்பள்ளியே எனலாம். ஊதாரணமாக முன்பள்ளிக்கு நேரத்துடன் வரும் மாணவனோ மாணவியோ பின்பு பெரிய பாடசாலை செல்லும் போத நேரத்தை கவனத்தில் கொண்டு அப்பாடசாலை விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க முடியும். முன்பள்ளியில் விளையாட்டில் ஈடுபட்டு வெற்றி தோல்வி ஏற்படும் போது வெற்றி பெற்றவனுக்கு பாராட்டு தெரிவிக்கும் போது தோல்வி அடைந்த மாணவனுக்கு அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையை உருவாக்குவதுடன் தட்டிக் கொடுக்கவும் வேண்டும். இவ்வாறு முன்பள்ளியில் இதனை செய்வதனூடாக மாணவன் நல்ல ஒருவனாக திகழ வழி வகுக்கும். பிஞ்சு நெஞ்சில் நஞ்சை ஊற்றி பகமையும் வைராக்கியத்தையும் வளர்க்க நாம் உந்து சக்தியாக மாறி விடக்கூடாது.

ஒழுக்கம் விழுப்பம் தரலாயினும் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்னும் வள்ளுவன் கூற்றுக்கமைய சிறுவயதினிலே நாம ஒழுக்கத்தையும் நல்ல பண்புகளையும் நல்ல எண்ணங்களையும் நாம் தோற்று விப்போமானால் அந்த மாணவர்கள் ஒரு போதும் பெரியவனானாலும் பதவி பட்டங்கள் பெற்றவனானாலும் வழி தவறிப் போவதற்கு சாத்தியமிருக்காது. எந்தப் பெரிய பதவியில் இருக்கும் ஒருவரை நாம் கேட்போமானால் நீங்கள் முன்னேற்ற மடைய காரணமாயிருந்தவர்கள் யார் யாரெனக் கேட்டால் அவர்கள் கூறும் முதல் பதில் நான் படித்த முன்பள்ளியும் கற்பித்த ஆசிரியரும் என்றே. இவ்வாறிருக்கும் போது ஒரு ஆசிரியர் தனிதியங்கவும் முடியாது அவர்களுக்கு பெற்றோர் சமூகத்தினருடைய ஒத்துழைப்பும் தேவை ஏனெனில் மாணவனுடைய கல்வியில் சூழலும் செல்வாக்கு செலுத்துகின்றது. பாடசாலை வரும் போது மாணவன் ஒருவன் பல செய்திகளைக் கொண்டு வருவான். குடும்பப் பிரச்சினை அயலவருடன் சண்டை அவர்கள் இவ்வாறாக பேசினார்கள் என்று இவற்றை நோக்கும் போது சிறுவர்கள் நற்பிரசையாக திகழ்வதற்கும் சூழலில் வசிப்பவர்கள் பெரிதும் பங்காற்ற ஒத்துழைக்க வேண்டும்

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிற்க்கையிலே என்ற கவிஞர் மிக அழகாகப் பாடுகின்றார். அவனை வளர்த்தெடுப்பதுவும் அவனுக்கு ஊட்டும் ஒவ்வொரு விடயமும் அவனுக்கு ஆரோக்கியமுடைய விடயமாக இருந்தாலே அதுவே அவர்களை நல்வர்களாக்கி விடுகின்றது. இதற்கு அன்பே மிகவும் பிரதானமான ஒன்றாக கொள்ளப்படு கின்றது.

எனவே ஒரு வீடோ அல்லது கட்டிடமோ நாம் கட்டும் போது எவ்வாறு திட்டமிட்டு அத்திவாரம் பெலமாக போடுகின்றோமோ அப்போது தான் அந்த கட்டிடம் நல்ல பிரபல்யமான கட்டிடமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்ற மளிப்பதுடன் கட்டியவர்களுக்கும் பெருமை சேர்க்கின்றது. அதே போன்று தான் இந்த சின்னஞ் சிறார்களுக்கு கொடுக்கும் ஒவ்வொரு செய்தியும் ஒவ்வொரு விடயமும் நல்லவையாகவும் அவர்கள் புரியும் வகையிலும் நாம் நெறிப்படுத்தும் போது நாளை அவன் நல்ல மனிதனாக சேவையாளனாக மிளிர நாம் வழிவகுக்க வேண்டும். எனவே பிஞ்சு நெஞ்சில் பதியும் ஒவ்வொரு விடயமும் அவனது வாழ்க்கைக்கு அத்திவாரமாக அமைகிறது. ஆகவே முன்பள்ளியில் ஒரு பிள்ளைக்கு எதனை கற்பிக்கின்றோமோ அதுவே அவனது வாழ்க்கைக்கு அத்திவாரமாகவும் ஏணியாகவும் அமைவதுடன் தனது வாழ்வை கொண்டு நடத்துகின்ற ஒரு தலைமைத்துவமும் அவனுக்குள் வேரூன்றி வளர்ந்தோங்குவதனை அவதானிக்க முடிகின்றது.

**மேற்படி தலையங்கத்தினை பல முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவு செய்து கட்டுரை எழுதியுள்ளனர். அவற்றில் சிறந்த கட்டுரையாக திருமதி ஞானராஜ் பாலேஸ்வரியின் கட்டுரை தெரிவு செய்யப்பட் டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிக் கல்வியே வாழ்க்கையின் உரம்

கு. பிரவீனா சிவலப்பிட்டி முன்பள்ளி புங்குடுதீவு

**அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது** என்கிறார் ஔவையர். ஆதலால் புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்திருக்கும் நாங்கள் ஒவ்வொருவரும் பாக்யசாலிகளே. இந்த அருமையான மனிதப்பிறவியை எடுத்திருந்தாலும் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கா விட்டால் அதனால் எதுவித பிரயோசனமும் இல்லை.

கல்வி கற்று அதன்படி நடந்து மனிதர்களாக வாழ்ந்தால் தான் இந்த மானிடப்பிறவி மகத்தானதாக இருக்கும். எவ்வளவு பணக்காரர்களாக இருந்தாலும் கல்வி அறிவு இல்லையென்றால் அது சிறப்பில்லாத ஒன்று தான்.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக** என்பது வள்ளுவர் வாக்காகும் படித்தால் மாத்திரம் போதாது படித்தபடி நடக்கவும் வேண்டும். இதற்கு உறுதுணை புரிவது பாலர் கல்வியே. இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பது முத்தோர் வாக்கு அந்த வகையில் சிறு பாராயத்திலே கற்கும் கல்வியே தான் உள்ளத்திலே பசுமரத்தாணி போன்று பதிந்து விடும். நல்லன எது தீயன எது என்று பகுத்தறியும் பராயம் இருக்கும் போதே கல்வியைக் கற்று விட வேண்டும். இப்பரந்த உலகிலே இப்படித் தான் வாழ வேண்டும் என்று நம்முன்னோர்கள் நீதி நேர்மை நல்லொழுக்கம் நற்பண்பு என்று இன்னொரன்ன பலரும் இணைந்த உண்மையான இயல்பு வாழ்க்கையை நாமும் பின்பற்ற வேண்டும். அவ்வாறு அதைப்பின்பற்றி வாழ்க்கையை வாழ்ந்து வந்தாலே நாம் மனித வாழ்வில் வெற்றி காண முடியும்.

தொட்டில் பழக்கம்சுடுகாடுமட்டும்என்றுஒரு பழந்தமிழ்வாக்கு உண்டு. அதாவது சிறு பராயத்திலே நாங்கள் எந்த மாதிரியான பழக்க வழக்கமுள்ள பண்பு நிறைந்வாழ்க்கையை வாழப்பழகிக் கொள்ளுகின்றோமோ அந்த வாழ்க்கை பழக்கமும் பண்பும் தான் நமக்கு வழக்கமாக வந்து விடும். பொய் தீய பழக்மும் பொய் புறங்கூறுதல் என்று பழகி விட்டால் அதை பிறகு மாற்றவே முடியாது. ஆனால் இள வயதிலே பாலர் பருவத்திலே நல்ல பழக்க வழக்கமும் நற்பண்பும் எம்முடைய வாழ்க்கையில் இணைந்து விட்டால் அதுவே கடைசிவரைக்கும் எமக்கு உறுதுணையாக இருக்கும். நாம் எதுவும் தெரியாமல் தவறு இழைத்து விட்டால் மனச்சாட்சி உறுத்திக் கொண்டேயிருக்கும் பிழை செய்ய இடமிருக்காது. இந்த மாதிரி நற்பண்பு பழகுமிடம் முன்பள்ளி தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதப்பண்புகளும் நல்ல பழக்க வழக்கங்களும் பழகுமிடம் முன்பள்ளி தான் இந்த முன்பள்ளிப் பருவம் தான் எமது மனித வாழ்க்கையின் அடி அத்திவாரம் ஒரு வீடு நீண்டகாலப்பாவனையும் உறுதியும் பலமும் இருக்க வேண்டுமானால் முதலிலே போடப்படுகின்ற அத்திவாரம் தான் நன்றாகப் போடப்பட வேண்டும். அவ்வாறு நல்ல முறையில் சீமெந்து கல் மணல் சேர்த்து கலவை முறையாகப் போட்டால் தான் வீடு நன்றாக இருக்கும். இடையில் வெடிக்காமல் வெடித்து வீழாமல் நல்ல பலத்துடன் உறுதியாக இருக்கும்.

வீடு உறுதியாக இருக்க எவ்வளவு அக்கறை காட்டுகிறோமோ அவ்வளவு தூரம் குழந்தை வளர்பிலே கவனம் இருக்க வேண்டும். சின்னப்பிள்ளையாக முன்பள்ளியில் கற்கின்ற பாடங்களும் பழக்க வழக்கங்களும் நல்லதாக இருத்தல் மிகவும் முக்கியமானதாகும். முன்பள்ளியிலே நற்பழக்கம் பழகிக் கொள்வது அத்தியாவசியமான ஒன்று

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்பது பழமொழி குழந்தையாக வளர்ந்து பாலர் பருவம் அடைகின்ற பொழுது நல்ல பழக்க வழக்கங்கள் மற்றும் நற்பண்புகள் யாவும் பழகிக் கொள்ள வேண்டும். இந்த சிறு பாலப்பருவத்திலே நல்லவற்றை பழகினால் தான் அது முதுமையிலும் தொடர்ந்து வரும். இதனை நாம் நன்கு ஆராய்ந்து நோக்கிற பொழுது முன்பள்ளிக்கல்வியின் வாழ்க்கையின் உரமாகத் தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வக்குழந்தைகள் இல்லத்தினால் மாணவருக்கு வழங்கப்பட்ட சேவைகள்

புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த நிர்வாகிகளினாலும் மக்களினாலும் இக் கிராமத்தைச் சேர்ந்த சிறார்களை வளப்படுத்தி நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் இவ்வுலகில் வலம் வரச்செய்ய வேண்டும் என்ற சீரிய நோக்குடன் முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் 1977 ம் ஆண்டு கிடுகினால் வேயப்பட்ட கொட்டகையினால் முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு நடாத்தி வரப்பட்டது. 1980ம் ஆண்டு 52 பிள்ளைகளுடன்இம்முன்பள்ளி இயங்கியது. (ஆதாரம் சங்கமம் புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலய வெளியீடு 1980) . 1980ம்ஆண்டு வைகாசி மாதம் 29ம் திகதி முன்னாள் ஆயர் வணக்கத்திற்குரிய து.தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் ஆசியுடன் தெய்வக்குழந்தைகள் இல்லம் என்னும் மனித நேய அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இவற்றை அமைப்பதற்குப் பல நல்ல உள்ளங்களின் உதவிகளைப பெற்று அயராது உழைத்துச் செயல்படுத்தியவர் காலஞ்சென்ற முன்னாள் இயக்குனர் திரு.சு.யோ.பூராசா அவர்கள் ஆவார்.

இந்த இல்லத்தில் முன்பள்ளிச் சிறார்களுக்கு கல்வி போதித்தது மட்டுமல்லாது கிராம மக்களையும் அறிவுநிரம்பியவர்களாக திகழச் செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் 12.7.1982ம் ஆண்டு புங்குடுதீவு தேசிய சுகாதார விழா வீரமாமுனிவர் கலையரங்கு தெய்வக்குழந்தைகள் இல்லம் ஆகிய இடங்களில் ஆலய உதவியோடும் அயலில் வாழ்ந்தர்வர்களின் உதவியோடும் சிறப்பாக நடாத்தப்பட்டது. துறைசார்ந்த நிபுணர்கள் வைத்தியர்கள் வருகை தந்து பரிசோதனைகள் செய்ததோடு கருத்தரங்குகள் பட்டிமன்றங்கள் ஆய்வுகள் கலை நிகழ்ச்சிகள் நடாத்தி மக்களை விழப்புறச் செய்ததுடன் பரிசுகளும் வழங்கப்பட்டன.இந்நிகழ்ச்சியானது ஆலயத்தின் பூரண பங்களிப்புடன் மக்களின் ஒத்துழைப்புடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

சிறுவர்களுக்குவழங்கும் திரிபோசா மாவை உரியவர்களிடம் பெற்று புங்குடுதீவில் உள்ள சகல முன்பள்ளிகளுக்கும் தெய்வக்குழந்தைகள் இல்லம் ஊடாக வழங்கப்பட்டது.இடையிடை அன்பர்களிடம் இருந்து உணவுப் பொருட்கள் பெற்று சுழற்சி முறையில் உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

1977ம் ஆண்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்ட பின்1980ல் தெய்வக்குழந்தைகள் இல்லம் அமைக்கப்பட்டு முன்பள்ளி நடாத்தி 1991ம் ஆண்டு இடம்பெயரும் வரை திருமதி சேவியர் ஸ்ரனிஸ்லோஸ்கோமளவல்லி ஆசிரியையாக இருந்து திறம்பட செயலாற்றி வந்தார்." **கோமளம் மாமி"** என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர். எல்லோர் மனதிலும் நிறைந்தவர். இன்று எம்முடன் இல்லை.

1991ம் ஆண்டு இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் சென்று இருந்த வேளையிலும் அதன் பின் 1995ம் ஆண்டு இடம்பெயர்ந்து வன்னி சென்றிருந்த வேளையிலும் புங்குடுதீவு புனித அந்:தோனியார் ஆலய தெய்வக்குழந்தைகள் இல்லத்தின்பல்வேறு சேவைகள் பல நல்ல உள்ளங்களின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டன.

17.10.1991ல் இடம் பெயர்ந்து யாழ் வந்து அல்லற்பட்ட மாணவர்களுக்கு கொழும்பு வர்த்தகர்களிடம் பணம் பெற்று சீருடை வாங்கி வழங்கினார். 30.10.1995ம் ஆண்டு முதல் 22.2.2002 வரையான காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு வெளிநாட்டில் வாழும் நண்பர்களிடமும் உறவுகளிடமும் கொழும்பு வர்த்தகர்களிடமும் மற்றும் நல்உள்ளங்களிடமும் பணம் பெற்று கல்வி உபகரணங்கள் சீருடைகள் மூக்கு கண்ணாடிகள் என்பன வாங்கி வழங்கினார். போரில் நேரடியாக பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரம் வாங்கி வழங்கப்பட்டன. இப்பணிக்கு அன்றைய கிளிநொச்சி அரச அதிபர் திரு.தி.இராசநாயகம் அவர்களும் காலஞ்சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வக்குழந்தைகள் முன்னால் பொருளாளர் சுருவில் திரு.தா.நாகலிங்கம் அவர்களும் காலஞ்சென்ற அவரது மனைவியார் செல்லம்மா அவர்களும் உறுதுணையாக இருந்தார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இராமநாதபுரம் முன்பள்ளி இராமநாதபுரம் தெற்கு கி.அ.சங்கம் கிளி.அழகாபுரி வித்தியாலயம், கிளிமாயவனூர் வித்தியாலயம், அழகாபுரி நூலகம், **அன்புப் பாலம்** அழாகபுரி விளையாட்டு மைதானம், (பத்து ஏக்கர்) என்பனவற்றை அன்றைய அரச அதிபர் திரு .தி.இராசநாயகம் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் கிராம அலுவலர் சி.நா.தண்டாயுத பாணி பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.மாவை சோ.சேனாதிராசா திரு.அ.விநாயகமூர்த்தி திரு.ந..ரவிராஜ் திரு.ப.சந்திரசேகரன் திரு.தொண்டமான் ஆகியோரின் உதவியுடன் திரு.ச.செல்வநாயகம் தலைமையிலான குழுவினரின் பங்களிப்புடன் நிறைவேற்றி முடித்தார்.

2004ம் ஆண்டு ஆவணி மாதம் மீண்டும் புங்குடுதீவு வந்து தெய்வக்குழந்தைகள் இல்லச் செயற்பாடுகளை மீண்டும் தொடக்கினார். 27.7.2005ல் 15முன்பள்ளிகளைச் சேர்ந்த 246 பிள்ளைகளுக்கு சீருடைத்துணியும் கல்வி உபகரணங்களும் வழங்கப்பட்டது.

3.10.2005ல் புங்குடுதீவில் உள்ள 15முன்பள்ளிகளின் 246 பிள்ளைகளுக்கு 1ம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர் பரராச சிங்கம் கிருஸ்ணவதி அவர்களின் நினைவாக வழங்கப்பட்ட அரிசி பங்கீடு செய்யப்பட்டது.

8.10.2005ல் வேலணை மண்கும்பான் அல்லைப்பிட்டி மண்டைதீவு என்ற ஊர்களைச் சேர்ந்த 15 முன்பள்ளிகளின் 370பிள்ளைகளுக்கு புங்குடுதீவு 1ம் வட்டாரலத்தைச் சேர்ந்த அமரர் பரராசசிங்கம் கிருஸ்ணவதி அவர்களின் நினைவாக வழங்கப்பட்ட சத்துணவுப்பொருட்கள் பங்கீட்டு வழங்கப்பட்டன.

12.11.2005ல் புங்குடுதீவில் உள்ள முன்பள்ளிகளைச் சேர்ந்த 246 பிள்ளைகளுக்கு புங்குடுதீவு 6ம் வட்டாரத்தை பிறப்பிடமாக கொண்ட அமரர் அப்பாக்குட்டி அன்னம்மா அவர்களின் ஆத்ம சாந்தி பிராத்தனையின் பேறாகசத்துணவு வழங்கப்பட்டது.

வேலணைப்பிரிவு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் மேற்கொண்ட குழந்தைகள் தின விழாவிற்கு பரிசுப்பொருட்கள் வாங்குவதற்கான மனித நேயம் கொண்டவரான யாழ்பல்கலைக்கழக பீடாதிபதி திரு.இரா சிவச்சந்திரன் அவர்களிடம் 10 000ரூபாவைப் பெற்றுக்கொடுத்தார்.

கௌரவ மாவை சேனாதிராசா பா.உ. அவர்களிடமும் மனித நேய சுவிஸ் அமைப்பிடமும் கேட்டுப் பெற்றுக்கொண்ட பணத்தின் மூலம் புங்குடுதீவில் உள்ள சகல பாடசாலை மமாணவர்களுக்கும் சீருடையும் கல்வி உபகரணங்களும் 2005ம் ஆண்டு ஆடி மாதம் 27,28, 29ம் திகதிகளில் வழங்கப்பட்டன

12.11.2005ல் புங்குடுதீவு மகாவித்தியாலயத்திதல் நடைபெற்ற நிகழ்வில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்பட்டன.

10.9.2005ல் வேலணை பிரதேச செயலக பிரிவில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை தெய்வக்குழந்தைகள் இல்ல முன்னாள் இயக்குணரால் நடாத்தப்பட்டது.

தெய்வக்குழந்தைகள்இல்ல முன்னாள் இயக்குணரின் வேண்டுகோளுக்கிணங்க தெய்வக்குழந்தைகள் இல்ல முன்னாள் பொருளாளர் அமரர் தா.நாகலிங்கம் அவர்கள் அவரது துணைவியாரின் நினைவாக செல்லம்மா மழலைக் கவிதை எனும் நூலை வெளியீடு செய்ததுடன் அவற்றை செல்லம்மா மழலைக் கானங்கள் எனும் இறுவட்டாகவும் வெளியீடு செய்வதற்கும் நிதி உதவி வழங்கினார்.

6..3..2008ல் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் முகாமையாளர் மக்கள் வங்கி ஊர்காவற்றுறை ஊடாக முன்பள்ளியைச் சேராத ஒரு வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு சேமிப்பு நிதி வழங்கப்பட்டதுடன் சிறுகைத்தொழில் அல்லது சுயதேவைக்கு கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டது.வேலணை பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கு வழங்கப்பட்ட பிளாஸ்ரிக் பொருட்கள் தெய்வக்குழந்தைகள் இல்லத்தின் ஊடாக முன்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன.

புங்குடுதீவு மக்களுக்கு மின்சாரம் கிடைப்பதற்காக யாழ் அரசஅதிபரை அணுகி செயற்பட்டார்.அதன்பயனாக 7.4.2008ல் மின்சாரம் கிடைக்கப்பெற்றது

## சேமிப்பு ஈகை நிகழ்வு ...........................

தெய்வக்குழந்தைகள் இல்ல முன்னாள் இயக்குணர் அமரர் திரு.சு.யோ.பூராசா அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.ந.கிருஸ்ணபிள்ளை (சமூகசேவையாளர்) அவர்களால் வருடா வருடம் திருமதி கமலாசினி. கிருஸ்ணபிள்ளை அவர்களின் நினைவாக புங்குடுதீவில் உள்ள அனைது முன்பள்ளி மாணவர்களுக்கும் சேமிப்பு கணக்கு திறப்பதற்கும், அச்சேமிப்பை ஊக்குவிப்பதற்குமான ஊக்குவிப்புத்தொகையுமாக, 2007ம் ஆண்டில் இருந்து இன்றுவரை நிதி உதவி வழங்கி வருகின்றார். 2007ம் ஆண்டில் இருந்து வழங்கப்பட்ட நிதிவிபரம்

| ஆண்டு | முன்பள்ளி மாணவர் தொகை | சேமிப்புத்தொகை | ஊக்குவிப்புத்தொகை பெற்றும்மாணவர் தொகை | ஊக்குவிப்புத்தொகை |
|---|---|---|---|---|
| 2007 | 222 | 22200 | - | - |
| 2008 | - | - | - | - |
| 2009 | 118 | 11800 | 151 | 18750 |
| 2010 | 136 | 13600 | 24 | 6400 |
| 2011 | 76 | 7600 | 48 | 17500 |

தரம் ஐந்தாம் வகுப்பு மாணவர்களின புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு

12.11.2005ல் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் மாணவர்களை கௌரவிக்குமுகமாக தெய்வக்குழந்தைகள் இல்லத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட நிகழ்வில் பரிசில்களை பெற்றுக்கொண்ட மாணவர் விபரம்

| மாணவர் பெயர் | பாடசாலைப் பெயர் |
|---|---|
| செல்வி .நடேசலிங்கம் கீர்த்தனா | யா/ புங். ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாலயம் |
| செல்வி.றொபின்மேரிறொகாந்தினி | யா /புங் .மகாவித்தியாலயம் |

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.ஆர்.சுந்தரலிங்கம் (தொழில் அதிபர்) மயூரா அன்பளிப்பகம் யாழ்ப்பாணம் நாம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வருடா வருடம் 5ம் தரபுலமைப் பரீட்சையில் சித்தயடைந்த மாணவர்களுக்கு 5000 / = வை ஊக்குவிப்புத்தொகையாக எமது நிறுவனத்திற்கு ஊடாக வழங்கி வருகின்றார்.

| ஆண்டு | மாணவர் பெயா | பாடசாலைப் பெயர் |
|---|---|---|
| 2009 | யா/ புங் /மகாவித்தியாலம் | செல்வி.பாசுதா.பாலசிங்கம் |
| 2010 | யா புங் ஸ்ரீ சுப்பிரமணியம் மகளீர் வித்தியாலம் | செல்வன் வி வினோஜன் |
| | யா/ புங். ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயம் | செல்வன் உ. ரூபன் |
| 2011 | யா/ புங் /மகாவித்தியாலம் | செல்வி.அஸ்வினா.பாலசிங்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவன் செல்வன்கிறிஸ்ரி.யுவராஜ் க.பொ.தர.உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு (3A) பெற்று யாழ்பல்கலைக்கழகத்திற்குதெரிவு செய்யப் பட்டதை தெய்வக்குழந்தைகள் இல்லத்தினால் ஊக்குவிப்புத்தொகை 5000/ வழங்கி 2009ம் ஆண்டு கௌரவிக்கப்பட்டார். இதற்கு திரு.ஆர்.சுந்தரலிங்கம் (தொழில் அதிபர்)மயூராக அன்பளிப்பகம் யாழ்ப்பாணம் ஊக்குவிப்புத்தொகை தந்து உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடப்பெயர்வின் முன் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள்

புங்குடுதீவு குறிகாட்டுவான் அ.த.க.பாடசாலை உருவாகுவதற்கு 14.1.1957 -8.10.1958 வரை அர்ப்பணிப்புடன் உழைத்தார்

புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கு 1966 1967ம் ஆண்டு காலப்பகுதியில் பெறுமதியான நூல்களும் புவியியல் உபகரணங்களும் தளபாடங்களும் பொதுமக்களின நிதிஉதவியுடன் வழங்கப்பட்டது.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் வர்த்தகப்பரிவு ஆரம்பிக்கத் தேவையான தட்டுஅச்சுப் பொறிகளை புங்குடுதீவின் பெரியார்கள் இ.நாகலிங்கம் கா.செல்லத்துரை ஆகியோரிடம் கேட்டு வாங்கினார்.நயினாதீவு ஆர் .ஆர்.அப்பாத்துரை ஆசிரியர் அவர்களிடம் கேட்டதற்கு இணங்க பணிச்சம்மதக் கடிதம் தந்தார். அதனை கல்வி அமைச்சில் சமர்ப்பித்து 8.4.1968ல் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் வர்த்தகப்பாடம் நடைபெறுவதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

5.6.1968ல் திரு சு.யோ.பூராசாவின் முயற்சியினால் அரசினர் உதவியுடன் இயங்கும் மேசன் தச்சுத்தொழில் பயிற்சி நிலையம் புங்குடுதீவு சனசமூக நிலையக் கட்டிடத்தில் திறந்து வைக்கப்பட்டது. இதனால் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பலன் அடைந்தார்கள்.இப்பணிக்கு உதவிய தலைவர் திரு.மு.மயில்வாகனம் அவர்கள் நன்றியோடு நினைவு கூரப்படவேண்டியவர்.

9.8.1969 புங்குடுதீவு மேற்கு அ.மி.த.க.பாடசாலைக்கும் 21.3.1972ல் புங்குடுதீவு இராச இராசேஸ்வரி பாடசாலைக்கும் நூல் நிலையங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

1935ம்ஆண்டு உருவான புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் 15.6.1972 வரை கிணறு இருக்கவில்லை. ஆசிரியர் அவர்களின் முயற்சியினால் குழச்செயற்பாட்டின் மூலம் 21.6.1972ல் நல்ல தண்ணீர்க் கிணறு வெட்டிக்கொடுக்கப்பட்டது.

ஈழத்தில் முதன் முதலாக 1973ல் எமது அருள்மிகு அந்தோனியார் விழாவில் நாதஸ்வர மேதை **N.R**கோவிந்த சாமி அவர்களின் நாதஸ்வரகான வேள்வியை படைத்தார்.அன்று முதல் இன்று வரை இவ் இசைக்குடும்பம் இவ் ஆலயத்தில் தங்கள் பங்களிப்பை நிறைவேற்றி வருகின்றனர்.

16.4.1974ல் வீரமா முனிவருக்கும் 15.4.1975ல் நல்லூர்சுவாமி ஞானப்பிரகாசருக்கும் எமது ஆலய நிர்வாகத்தால் விழா எடுக்கப்பட்டது. இவ்விழாக்களில் சர்வமத குரு முதல்வர்களும் அறிஞர்களும் கலைஞர்களும் கவிஞர்களும் பங்கு கொண்டு சிறப்பித்ததோடு புத்தெழிச்சியை உருவாக்கினர்

8.10.1974ல் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பொழுது ஊழியர்களினதும் இயக்குணர்களினதும் கூட்டுறவு ஆளர்களினதும் ஆலோசனையுடன் முற்போக்காளர்களின் உதவியோடு சங்கத்திற்கு எரிபொருள் நிரப்பு நிலையம் உருவாக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்திற்கு புதிய லொறி கொள்முதல் செய்யப்பட்டது

வர்ணம் மதம் உயர்வு தாழ்வு வேறு பாடு இன்றி 25இளம் தலைமுறையினர் சங்கத்தின் பணிக்கு அமர்த்தப்பட்டனர்.

புதிதாக 3மக்கள் கடையும் 5சங்கக் கிளைகளையும் திறந்ததோடு பீடிக் கைத்தொழிலை மேம்படுததியதன் மூலம் பல வேலை பெற்றனர்

புங்குடுதிவு ப.நோ.கூ.சங்க கட்டிடத்தில் 3.9.1978ல் புங்குடுதீவு மக்கள் வங்கி திறந்து வைக்கப்பட்டது. இப்பணிக்காக நாம் முயன்ற போது அர்ப்பணிப்போடு உதவிய சு.கருணாகரன் பாராட்டுக்குரியவரே.

**மேற்கூறப்பட்ட விபரங்கள் யாவும் ஆதாரத்தின் அடிப்படையில் தொகுத்து வழங்கப்படவை.தொகுத்து வழங்கியவர் செல்வி.அன்பரசி.பூராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிஜத்தின் நிழல்கள்

புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலய தெய்வக்குழந்தைகள் இல்ல முன்பள்ளி ஆசிரியர் காலஞ்சென்ற திருமதி சேவியர் ஸ்ரனிஸ்லோஸ் கோமளவல்லி.



வன்னி மக்களுக்கு பொருட்கள் கையளிக்கப்பட்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சேமிப்பு ஈகை நிகழ்வு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவில் உள்ள அனைத்து முன்பள்ளி மாணவர்களுக்கு சீருடையும் கல்வி உபகரணங்களும் வழங்கிய போது









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செல்லம்மா" மழலைக் கவிதைகள் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கையளிக்கப்பட்ட போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தோனியார் ஆலய தெய்வக்குழந்தைகள் இல்ல முன்னாள் இயக்குனர் அமரர் திரு.சு.யோ.பூராசா(ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் 3ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு முன்பள்ளி ஆசிரியர்களிடையே நடைபெறும் ஆக்கத்திறன் போட்டி -2011

1) "முன்பள்ளிக்கல்வியே வாழ்க்கையின் உரம்" இக்கூற்றினை ஆராய்க.
2) மழலைச்சிறார்களின் பேச்சாற்றல் விருத்தியினை மேம்படுத்த நீர் கையாளும் முறைகளை கட்டுரை வடிவில் தருக.
3) முன்பள்ளி செல்லமுன்னரே சிறார்களுக்கு கணித ஆற்றல் உண்டு. எனவே கணித எண்ணக்கருவினை முன்பள்ளி எவ்வளவு தூரம் செல்வாக்கு செலுத்துகிறது. இவற்றை உதாரணத்துடன் விளக்குக.
4) "மகிழ்ச்சியான கற்றலை" ஆடல், பாடல், மூலம் செயற்படுத்தமுடியும் என்பார்கள். இதனை முன்பள்ளி சிறாருக்கு எவ்விதம் நடைமுறைப்படுத்தலாம் என்பதற்கு உமது கருத்தினை எழுதுக.
5) "ஆக்கத்திறனால்" முன்பள்ளிமாணவரின் உளஆற்றலை காணமுடிகிறது. இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை விளக்கமாக எழுதுக.
6) "உமது முன்பள்ளி அனுபவத்தின் மூலம் பல தரப்பட்டமாணவரின் செயற்பாட்டை அவதானிக்க கூடியதாக அமைந்திருக்கும்" எனவே அப்படியான மாணவருக்கு நீர் கையாண்ட உத்திகள்(பரிகாரம்) எவை எனப்பட்டியல் படுத்தி விளக்குக
7) "நவீன கற்றல் சாதனங்களின் பங்களிப்பு" முன்பள்ளிக்கு பெரிதும் உதவுகின்றன உமது வகுப்பறைப் பயன்பாட்டினை எழுதுக.
8) முன்பள்ளி சிறார்க்கு முன்பள்ளிக்கற்றலைத்தவிர பெற்றார் மாலை நேர வகுப்பினை நாடுகிறார்கள். இதற்கு நீர் கூறும் ஆலோசனைகள் யாவை?
9) முன்பள்ளிக்கு பெற்றோர், ஏனைய சமுகத்தினரின் ஆதரவு, தேவை இதற்கு நீர் கையாளும் முறைகள் என்ன?
10) "முன்பள்ளி ஆசிரியர் தாய் போன்ற இயல்பினை" கொண்டவராக அமைய வேண்டும். இதற்கு நீர் கூறும் விளக்கங்கள் யாவை?

இவ் வினாக்கொத்தினை திருமதி.கலா.பிரகதீஸ்வரன் (ஓய்வு பெற்ற முன்பள்ளி ஆசிரிய ஆலோசகர் )அவர்களால் தயாரிக்கப்பட்டு 31.1.2011 ம் திகதி புங்குடுதீவு மகாவித்தியால மண்டபத்தில் செல்வி .அன்பரசி.பூராசா தலைமையில் ஆக்கத்திறன் போட்டி நடைபெற்றது.

P. 559

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org